Registered as a Newspaper in Ceylon

விலை சதம 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு

சந்தா விபரம்

வாரப்பதிப்பு உட்பட

ஒரு வருடத்துக்கு ரூபா 40-00

6 மாதத்துக்கு ரூபா 21-00

3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 899 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 6 ஆம் நாள் துல்கஃதா 24 (19-4-63) வெள்ளிக்கிழமை இதழ் 69

# ஆனி 5-ல் நேரடி நடவடிக்கை?

## கிழக்கு மாகாணத்தில் 20-ம் திகதி பிரசாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

**கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக்கட்சி தனது பிரசாரக் கூட்டங்களை முடித்துக் கொண்டபின்னரே நேரடி நடவடிக்கைபற்றி இறுதி முடிவு செய்யப்படுமெனத் தெரியவருகிறது. கிழக்கு மாகாணத்தில் பிரசாரக் கூட்டங்கள் இம்மாதம் 20-ந் திகதி ஆரம்பமாகிறது.**

**கட்சியின் நடவடிக்கைக் குழு இப்பொழுது அடிக்கடி கூடி ஆலோசனை செய்து வருகின்றபோதிலும் இன்னும் இறுதித் திட்டங்கள் தயாரிக்கப்படவில்லையென்று அறியப்படுகிறது.**

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட தினமான ஜூன் மாதம் 5-ந் திகதி நேரடி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கட்சிக்குள் அபிப்பிராயம் நிலவுவதாகவும் ஆனால் சரியான முறையில் மக்களைத் தயார் செய்யாமல் நேரடி நடவடிக்கையை ஆரம்பிக்கக் கூடாதென்பதே கட்சித் தலைவர்களின் கருத்தென்றும் தெரிகிறது.

வடக்கு மாகாணத்தில் 'எல்லாம்தமிழ்இயக்கவாரத்துடன்' பிரசாரக் கூட்டங்கள் முடிவடைந்துவிட்டன. இனிக் கிழக்கு மாகாணத்தில் பிரசாரக் கூட்டங்களை நடத்தி மக்களை உஷார்படுத்திக்கொண்டு நேரடி நடவடிக்கைபற்றித் தீர்மானிக்கலாமென ஆலோசனை செய்யப்படுகிறது.

## இரண்டாவது தேயிலைத் தொழிற்சாலை

கொழும்பு, வியாழன்

இரத்தினபுரியைச் சேர்ந்த தெல்கொட என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள, நாட்டின் இரண்டாவது தேயிலைத் தொழிற்சாலை இம்மாத இறுதியில் உற்பத்தி வேலைகளை ஆரம்பிக்கும். இம் மாதம் 27-ந் திகதி தொழிற்சாலை திறந்து வைக்கப்படும்.

## 26,000 அடி உயரத்தில் மலையேறும் கோஷ்டியினர்

காட்மாண்ட், ஏப். 18

அமெரிக்க மலையேறும் கோஷ்டியினர் 26,000 அடி உயரத்தை அடைந்துவிட்டார்கள் என்று காட்மாண்டியிலிருந்து வெளியான செய்திகள் கூறுகின்றன. அமெரிக்க மலையேறும் கோஷ்டியினர் தற்பொழுது இருக்கும் இடம் இமயமலையை இணைக்கும் பகுதியெனக் கூறப்படுகிறது.

## பல்கலைக்கழக பிரவேச பரீட்சை

களனி, வியாழன்

வித்தியாலங்கார பல்கலைக்கழக பிரவேச பரீட்சை இம்மாதம் 16-ம் திகதி ஆரம்பமாகிறது. 16 நிலையங்களில் சமார் 5,000 மேற்பட்டவர்கள் இப் பரீட்சை எழுதுவார்கள். இவர்களில் 1,000 பேர்வரை பெண்களாவர்.

## 10 பேர் மரணம்

பாரிஸ், ஏப். 18

ஈஸ்டர்தின விடுமுறையைக் கழிப்பதற்காக தங்களது வீடுகளுக்குச் சென்று திரும்பியவர்களில் நேற்று 27 பேர் விபத்துக்களில் சிக்கி மரணமானுர்கள். இதனுடன் நேற்றுவரை ஈஸ்டர் தின விடுமுறை கழிக்க வந்தவர்களில் மொத்தம் 106 பேர் கடந்த வாரத்தில் மரணமானுர்கள்.

## "ஒத்துழைத்தால்தான் உரிமை கிடைக்கும்"

### மூதூர் எம். பி. மஜீத் கூறுகிருர்

### பிரச்னைகளுக்குத் தமிழரசு வாதிகளே காரணமாம்

திருக்கோணமலை, புதன்

"சத்தியாக்ரஹம் அல்லது நேரடிநடவடிக்கை போன்ற பயமுறுத்தல்களின் மூலம் தமிழ்பேசும் இனம் விமோசனம் பெறலாமென்ற எண்ணம் 1947-ம் ஆண்டுக்கு முன்னர் வெற்றியளித்திருக்கலாம். ஆனல் இதுபோன்ற பயமுறுத்தல்கள் இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கு வெற்றியைக் கொடுக்காது. இன்னும் தமிழ் பேசும் மக்களின் வருங்காலம் இருள் சூழ்ந்ததாக மாற்றுவதற்கு இப்பயமுறுத்தல்கள் உதவுமேயொழிய இருளகல வழிகாட்டாது."

இவ்வாறு மூதூர் இரண்டாவது எம். பி. ஜனுப். எ. எல். ஏ. மஜீத் சம்பூர் அரசினர் தமிழ் மகாவித்தியாலயத்தின் பெற்றூர் தினவிழாவிற்கு தலைமைவகித்துப் பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது:

"ஈழத்தமிழ்ப் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான அல்லை, அம்பாறை, கந்தளாய் போன்ற கிராமங்கள் இன்று சிங்கள ஆட்சியாளர் கையில் அகப்படக் காரணம் தமிழரசுவாதிகளே! தமிழரசுக்கட்சியினுற்றான் இப்பிரதேசங்கள் எமது கையிலிருந்து பறிபோயிற்று என பகிரங்கமாக நான் எந்த

(8-ம் பக்கம் பார்க்க)

## 'எதிர்க்கட்சி தலைவர் பதவியை எதிர்பார்க்கிறேன்'

— டீபன் பேக்கர்

### புதியமந்திரி சபை திங்களன்று பதவியேற்கும்

ஒட்டாவா, ஏப். 17

எதிர்க்கட்சித் தலைவராகத் தாம் வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக, கனடா பிரதமர் பதவியிலிருந்து வெளியேறும் திரு. டீபன் பேக்கர் தெரிவித்துள்ளார். திரு. டீபன் பேக்கர் தமது ராஜினுமாக் கடிதத்தை நேற்றுக் காலை கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பித்தார்.

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் திரு. டீபன் பேக்கர் தெரிவிக்கையில், பிரதமர் பதவியிலிருந்து தாம் வெளியேறிய போதிலும் எதிர்க் கட்சித் தலைவராக வருவதையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாகக் கூறினுர்.

கனடாவை ஆட்சி புரிந்த 13 பிரதமர்களில் தாமும் ஒரு பிரதமராகவிருந்தாலும், பிரதமராகவிருந்து எதிர்க் கட்சித் தலைவராக வரும் "பாக்கியம்" தமக்குக் கிடைத்திருப்பதையிட்டுப் பெருமைப்படுவதாகவும் அவர் கூறினுர்.

"இதுவரை கனடா பிரதமராகப் பதவிவகித்தவர்களில் எட்டுப்பேர் எதிர்க் கட்சித் தலைவர்களாகக் கடமை புரிந்திருக்கிருர்கள், அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து நான் செய்வேன். அவர்களின் முன்மாதிரியை நானும் பின்பற்றுவேன்" என்றும் திரு. டீபன் பேக்கர் கூறினுர்.

கனடாவின் புதிய பிரதமர் பதவியை அடையவிருக்கும் திரு. லெஸ்டர் பியர்ஸன், நிருபர்களிடம் தெரிவிக்கையில், மகாதேசாதிபதியின் அழைப்பைத் தாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறினுர்.

**திங்களில் பதவியேற்கும்**

லிபரல் கட்சித் தலைவர் லெஸ்டர் பியர்ஸனின் மந்திரி சபை, "திங்கட்கிழமை சத்தியப் பிரமாணம் செய்வதைத் தொடர்ந்து பதவியேற்கும்.

கனடா பிரதமர் திரு. டீபன் பேக்கர் தமது ராஜினுமாக் கடிதத்தை கவர்னர் ஜெனரலிடம் நேற்று சமர்ப்பித்தார். அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் பெரும் வெற்றியீட்டிய லிபரல் கட்சியினுல் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து திரு. டீபன் பேக்கர் தமது ராஜினுமாக் கடிதத்தை சமர்ப்பித்தார்.

கனடாவின் புதிய பிரதமரான திரு. லெஸ்டர் பியர்ஸனின் புதிய மந்திரி சபை எதிர் வரும் திங்கட்கிழமை பதவியேற்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

## துரவுக்குள் விழுந்து இரு குழந்தைகள் மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இரு குழந்தைகள் துரவில் வீழ்ந்து மரணமான சம்பவமொன்று வன்னேரிக் குளத்தில் நடைபெற்றுள்ளது. விளையாடிக் கொண்டிருந்த சகோதரர்கள் தவறி வீழ்ந்ததனுல் இப்பரிதாப சம்பவம் ஏற்பட்டது.

ஆறுமுகம் என்பவரின் குழந்தைகளான கனகரத்தினம் (8வயது) சந்திரகுமார்(3வயது) ஆகிய இரு குழந்தைகளே மரணமானவர்கள். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினுர். காலஞ்சென்றவர்களின் சகோதரர் தட்சணுமூர்த்தி (6 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று காலை தந்தை நெல் சூடு மதிப்பதற்குச் சென்றுர். தாய் சங்கக்கடைக்குப் பொருட்கள் வாங்கச் சென்றுர். கைக்குழந்தையான சகோதரியை ஏணையில்வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அண்ணுவும் தம்பியும் வீட்டுக்கருகில் உள்ள துரவில் விளையாடிக் கொண்டிருந்தனர். சிறிது நேரம்கழித்து அண்ணு ஓடிவந்து தம்பி துரவில் விழுந்துவிட்டதாகவும் அவனைக் காணவில்லையென்றும் கூறவே நானும் அண்ணுனும் ஓடிப்போய்ப் பார்த்தோம தம்பியைக் காணவில்லை அண்ணனும் துரவில் இறங்கினுர். பின் இருவரையும்காணவில்லை நான் ஓடிவந்து பக்கத்து வீட்டிலுள்ள காராட்சி என்பவரிடம் சொன்னேன். அவரும் வந்து பார்த்துச் சத்தம் போட்டார். மாமாவான சப்பையா நடராசா ஓடிவந்து துரவில் குதித்து முதலில் தம்பியை வெளியே எடுத்தார் சேற்றில் அகப்பட்ட தம்பி இறந்த நிலையில் காணப்பட்டார். அண்ணுவை வெளியே எடுக்கும்போது உயிர் இருந்தது. இங்குள்ள அப்போதிக்கரியிடம் கொண்டு சென்றபோது அங்கு அப்போதிக்கரி இல்லை. அண்ணு மரணமானுர். பின்னர்தான் பெற்றோர் வந்தனர்.

காரியாதிகாரி திரு. கந்தையா சாட்சிகளை ஆஜர் செய்தார். மரணவிசாரணை அதிகாரி தற்செயலாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## வரி விளம்பரம்

### உடனே தேவை

செட்டியாமடம் ஐக்கிய பண்டகசாலைக்கு ஓர் மனேஜர் உடனே தேவை ரொக்கப் பிணைப்பணம்ரூ.500-00 ஆதனப் பிணை ரூ. 500 கட்டவேண்டும் இன்றேல் முழுதும் ரூ. 1000-00 ரொக்கப்பிணையாகவும் கட்டலாம் மாதவேதனம் ரூ. 75-00 கொடுக்கப்படும். பஞ்சப்படி சகாயப்பணம் என்பன கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பஞ்செய்வோர் பின் வருவனவற்றை நிரப்பி அனுப்ப வேண்டும்.

1. பிறந்த திகதி 2 சொந்த இடம். 3 தராதரம். 4. அண்மையில் கிடைத்த நன்னடத்தைப் பத்திரம் 2. 5. கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றவராயும் அன்றேல் பண்டகசாலைகளின் முதிர்ந்த அனுபவமுள்ளவராயுமிருக்கவேண்டும். 6. உடன் படிக்கைக்குக் கைச்சாத்திட வேண்டும். 7. ஏனையவை நேரில். 8 விண்ணப்பங்கள் தலைவர், செட்டியாமடம், ஐ. ப. சாலை, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவேண்டும். 917

### நோய்வு நிறிவு

ஆணைப்படுத்த உக்கிரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றளோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
**வைத்தியர் பரிபூரணானந்தர்** கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

தற்சமயம் வியாபாரம் நடந்துகொண்டு இருக்கிற பல சரக்குக் கடை, தளவாடம், சாமான்கள் உட்பட விற்பனைக்கு உண்டு. நேரில் விண்ணப்பிக்கவும். வி. இலட்சுமணபிள்ளை, 3, பிறவுன் ரோட், பிள்ளையார் கோவிலடி, நீராவியடி. 918

### விற்பனைக்கு

ஒரு சிறிய தொகை 560/15, 500/14, 590/14, 520/13 டன்லப் கோல்ட் சீல் டயர்கள் வந்துவிட்டது. தேவைப்படுவோர் உடனே வருக. T. N. லிங்கம் & சன், ஸ்பேர் பாட்ஸ் டீலர்ஸ், சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம். போன் 408 915

### விளம்பரம்

கரைச்சி சைவ வித்தியாவிருத்திச்சங்கத்தினால் கிளிநொச்சி 7-ம்வாய்க்காலில் நடாத்தப்படவிருக்கும் குருகுலத்தில் தங்கி ஆதாரக் கல்வி கற்க விரும்பும் மாணவர்களின் விண்ணப்பங்கள் 30-4-63 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பிப்பவர்கள் 5-ம் வகுப்புச் சித்தி எய்தியவர்களாய், பத்து வயதுக்கு மேல் 18 வயதுக்குட்பட்டவர்களாய், தேகாரோக்கியமுள்ளவர்களாய் தொடர்ந்து ஐந்து ஆண்டு குருகுலத்தில் தங்கிக் குருகுல ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கச் சம்மதிப்பவர்களாய் இருக்கவேண்டும். தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு இலவச உணவு அளிக்கப்படும். ஜாதி, மத, இனபேதமின்றி மாணவர் தெரிவு செய்யப்படுவர்.

உணவுப்பணம் செலுத்திப் படிக்க விரும்புபவர்களின் விண்ணப்பங்களும் ஆலோசிக்கப்படும். ச. சுப்பிரமணியம். காரியதரிசி, கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கம, கிளிநொச்சி.
15-4-63 916


ஆசிரியருக்குக் கடிதம்

## இடமாற்றத்துக்கு ஆட்சேபம்

6-4-63-ல் நாவலர் பாடசாலையில் நிகழ்ந்த யாழ். மாவட்ட சனசமூக நிலையச் சமாச நிர்வாக சபையில் செயலாளர் திரு. த. துரைசிங்கம் அவர்களின் இடமாற்ற சம்பந்தமாக நிகழ்ந்த நிகழ்ச்சிஒன்று தங்கள் 16-4-63 'ஈழநாடு' இதழில் இடம்பெற்றிருக்கிறது. அதில் இதுசம்பந்தமாக நிகழ்ந்த பின்வரும் நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றமை உண்மைக்கு முரண்பட்டதாக இருப்பதினால் முழுஉண்மையும் வெளிப்படக்கூடிய முறையில் இவைகளையும் பிரசுரிக்குமாறு வேண்டுகிறேன்.

திரு. ச. இராசையா இடமாற்றத்தை ஆட்சேபித்துக் கொண்டுவந்த பிரேரணையை எதிர்த்து முகாந்திரம் இ. பி. இராசையா பேசியபோது முன்னறிவித்தல் இல்லாமல் இப்பிரேரணையைக் கொண்டுவந்தமை சரியல்லவென்றும் முன்னறிவித்தல் தந்திருந்தால் செயலாளர் திரு. த. துரைசிங்கம் செயலாளராக இருக்கத் தகுதியற்றவர் என்று தாம் எழுத்துமூலமான அத்தாட்சிகளுடன் நிரூபிக்கமுடியுமென்றும் குறிப்பிட்டார்.

சமாசச்செயலாளர்சில தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டபடியினால் நிலையங்கட்குள் இவரைப்பற்றித் திருப்தியீனம் இருப்பதினால் இப்படி ஒரு பிரேரணையை சமாசத்தில் உத்தியோக பூர்வமாகக்கொண்டு வருதல் சமாசத்தின் வருங்கால நன்மைக்குகந்ததல்ல என்றும் நான் ஒரு எதிர்ப்பிரேரணை கொண்டுவந்தேன இதை முகாந்திரம் இ. பி. இராசையா அநுவதித்தார்.

அவ்வாறு அசல் பிரேரணையைத் தவிர்க்காதபடியினால் முகாந்திரம் இ. பி. இராசையா தன் ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு வெளியேறினார். பின்னர்நானும் வேறுசிலரும் வெளியேறினோம்.

க. பே. முத்தையா
சுண்டிக்குளி.

## 'பிக்குகள் அரசியலில் ஈடுபடக்கூடாது' — எம். பி.

இரத்தினபுரி, வியாழன்
தங்கள் அரசியல் செல்வாக்குக்காக சமயத்தை பயன்படுத்தும் கட்சிகள் சமயத்துக்கு பெரும் அநீதியைச் செய்து வருகின்றனவென்றும், சமயத்தின் பெயரைச் சொல்லி அரசியலில் ஈடுபட்டு பிக்குகள் பணம் தேடுவதாயும், தான் இதைக் கடுமையாக எதிர்ப்பதாகவும் இரத்தினபுரி எம். பி. திரு. தனபால கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.


### விற்பனைக்கு

33 Sri 4542 கொம்மர் வான் 15 அந்தர் - முற்றும் புதுக்கிய நிலைமை. 228, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 919

### தேவை

அனுபவம் வாய்ந்த பாண், கேக் செய்யத் தெரிந்த தொழிலாளர்களும் பிஸ்கெட் வெட்டக்கூடியவர்களும் தேவை. வேலையைப் பொறுத்து சம்பளம் வழங்கப்படும். "கலாவிஸ்கோத்து", கற்பகானந்த பேக்கரி, உரும்பராய். 920


## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் சயிக்கிள் கடை திரு. ஆறுமுகம் அவர்களின் மனைவியாரும் திரு. இராசையாவின் தாயாருமான நாகம்மா காலமானார். ஈமக்கிரியைகள் இன்று 2 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். 931

## கம்யூனிஸ்ட் பட்டியலில் கியூபா

லண்டன், ஏப். 18
கம்யூனிஸ்ட் கோஷ்டி நாடுகளில் கியூபாவும் ஒரு நாடாக இடம் பெற்றுவிட்டது. மேதின வாழ்த்துக்களைப் பெறும் கம்யூனிஸ்ட் நாடுகளின் பட்டியலில் கொரியக் குடியரசுக்கும், மங்கோலியக் குடியரசுக்கும் முன்னால் கியூபா இடம்பெற்றுள்ளது. இந்தப்பட்டியலை 'பிராவ்டா' வெளியிட்டிருக்கிறது.

ஏனைய கம்யூனிஸ்ட் நாடுகளைப்போல கியூபா 'சோஷலிசத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது.' முன்னர் அது சோஷலிசப்பாதையில் "நடைபோட்டு" வந்தது.

சோஷலிச நாடுகள் தாக்கப்பட்டால், அதுரஷ்யாவையே தாக்குவதாகும். என்னும் ரஷ்ய கொள்கைக்கிணங்க, கியூபாதன் புது உயிர் அந்தஸ்தின் மூலம் ரஷ்யாவிடமிருந்து பாதுகாப்புப் பெறும் என்று அரசியல் வட்டாரத்தினர் கருதுகின்றனர்.

## இலங்கைவரும் போலந்து தூதுகோஷ்டி

கொழும்பு, வியாழன்
போலந்து வர்த்தக தூதுகோஷ்டியொன்று, இவ்வாரத்தில் இலங்கைவரும். இலங்கையில் இத் தூதுகோஷ்டியினர் ஒரு மாதகாலம் தங்கியிருப்பார்கள்

போலந்து - இலங்கை வர்த்தகம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை இத் தூதுகோஷ்டியினர் வர்த்தகமந்திரி திரு. டி. பி. இலங்கரத்னவுடன் நடத்துவார்கள். இரு நாடுகளுக்குமிடையேயான ஒரு வர்த்தக ஒப்பந்தத்திலும் அவர்கள் கைச்சாத்திடுவார்கள்.

## திருத்த மசோதா நிறைவேறியது

ராவல்பிண்டி, ஏப். 18
மேற்கு பாகிஸ்தானின் கிரிமினல் சட்ட திருத்த மசோதா கடந்த திங்கட்கிழமை லாகூர் சட்ட சபையில் நிறைவேறியது. திருத்த மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம், எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் வெளிநடப்பு செய்தனர்.

## திருடர் கைவரிசை

கொழும்பு, வியாழன்
இனந்தெரியாத மூன்று பேர்வழிகளால், வெளிநாட்டைச் சேர்ந்த திரு. சிரில் டோலி என்பவரிடமிருந்து, விலைமதிப்புள்ள கைக்கடிகாரமும், சில பிரயாணிகள் செக்கும், காசு 230 ரூபாவும் களவாடப்பட்டுள்ளது

கால்பேஸ் கோட்டு கட்டடத்திற்கு வெளியே, அவர் நடந்து சென்றபோது இந்த களவு நடந்தது. இச் சம்பவம் நடந்தபோது திரு. டொலி காயமடைந்தார். தூரகிழக்கு நாடுகளுக்கு உல்லாச பிரயாணம் செய்துவருபவர்தான் இவர் எனத் தெரியவருகிறது. இக் களவு சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## பழைய கோட்டை

லண்டன், ஏப்ரல் 18
பிரிட்டனில் சார்ன்வால் பகுதியில் பால்மவுத் என்னுமிடத்தில் 16-வது நூற்றாண்டில் எட்டாம் ஹென்றி கட்டிய கோட்டையை இளைஞர் தங்கும் விடுதியாக மாற்றுவதுபற்றி இளைஞர் ஹாஸ்டல் சங்கத்தினர் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.





ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோடு. மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE.TX.

# "சட்டத்திலிருந்து எவரும் தப்பிவிட முடியாது"

## லஞ்சஊழல் பற்றி மொரார்ஜி

புதுடில்லி, ஏப். 18

1963, 1964-ம் ஆண்டுகளின் மத்திய இலாகா செலவுக் கோரிக்கைகளை லோக சபை நேற்று ஏற்றுக் கொண்டது. செலவுக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெற்று நேற்றுடன முடிவடைந்தது.

லோக சபையில் நிதிமந்திரி திரு. மொரார்ஜிதேசாய் லஞ்ச ஊழல் சம்பந்தமாகப் பேசுகையில், லஞ்ச ஊழல் சம்பந்தமாக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும் என்றும் சட்டத்திலிருந்து எவரும் தப்பிவிட முடியாதென்றும் கூறினர்.

திரு. மொரார்ஜிதேசாய் மேலும் கூறியதாவது: "நாட்டில் லஞ்ச ஊழல்கள் காணப்படுவது மிகுந்த வருத்தத்தை உண்டாக்கிறது. லஞ்ச ஊழல், மோசடி ஆகியவற்றுக்கு எதிராக அரசாங்கம் இப்பொழுது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. எதிர்காலத்தில் அரசாங்கம் இந்த விஷயத்தல் மிகுந்த கண்காணிப்புடன் இருக்கும்.

லஞ்ச ஊழல், மோசடி ஆகிய குற்றச் சாட்டுகளில் சம்பந்தப்பட்டவர்கள் இலேசில் தப்பிவிடமுடியாது. குற்றவாளிகளுக்குரிய தண்டனை கிடைத்தேதீரும். சட்டத்துக்கு முன்னுல் தாழ்வு, உயர்வு கருதபபடமாட்டாது. சட்டத்திலிருந்து எவரும் தப்பிவிட முடியாது. ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், சட்டங்களுக்கு உகந்தத்தாக அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தங்கக்கட்டுப்பாடு நீடிக்கும். ஆனுல் தங்கக் கட்டுப்பாட்டில் சில மாறுதல்கள் செய்யப்படும். 24 கரட் தங்க நகைகளைத் தயாரிக்க அனுமதியளிக்க வேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். இதற்கு அனுமதியளிக்க முடியாது."

## டாக்டர் முதலியாருக்கு "பத்ம விபூஷன்"

புதுடில்லி, ஏப்ரல் 18

உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகீர் ஹுஸெய்ன், சமஸ்கிருதப் பேரறிஞர் டாகடர் பாண்டுறங்கார்னே ஆகியோருக்கு இன்று "பராதரத்னம்" விருதுகளை ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வழங்கினர்.

சென்னைப் பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியாருக்கு "பதமபூஷன்" விருது வழங்கப்பட்டது.

வானெலி ஒலிபரப்பாளர் மெல்வின் டி மெல்லோவுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

விருது அளிப்பு நிகழ்ச்சியில் பிரதமர் நேரு, மந்திரிகள், எம். பி.க்கள், உயர் சிவில், ராணுவ அதிகாரிகள் ஆகியோர்கலந்துகொண்டனர்.

## பாராட்டுவிழா வைகாசியில் நிகழும்

யாழ்ப்பாணம், வியாழன்

பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களின் பாராட்டு விழாவும், பொற்கிழி அளித்தலும் வைகாசி மாதத்தில் நடாத்த கமிட்டியினர் முடிவுசெய்துள்ளனர்.

வண்ணை நாவலர் பாடசாலையில் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற வித்துவான் பாராட்டு விழாச் சபைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

## "மத்திய வகுப்பினரின் உதவி தேவை"

வஹகோட்டை, வியாழன்

மத்திய வகுப்பினரின் உதவிகளின்றி எந்த நாடும் தனது பிரச்னைகளைத் தீர்க்க முடியாது என்று கலுந்தவ என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் போக்குவரத்து மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. டி. பி. தென்னக்கூன் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கிராமப்புறங்களிலுள்ள கமக்காரர்களுக்கு உதவியளிக்க அரசாங்கம் விரும்பிய போதிலும், சம்பந்தப்பட்ட இலாகாக்கள் கமக்காரர்களின் நலனில் அதிக அக்கறை எடுக்கவில்லை என்று கூறினர்.

## காஷ்மீர் பேச்சுக்கள் 22-ல் நடைபெறும்

கராச்சி, ஏப். 17

காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான பிரச்னைகள் பற்றி பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெறவிருக்கும் 5-வது சுற்றுப்பேச்சுக்கள் இம் மாதம் 22-ம் திகதி கராச்சியில் நடைபெறும்.

இப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் இந்திய கோஷ்டிக்கு இந்திய ரயில்வே மந்திரி சர்தார் சுவர்ண் சிங் தலைமை தாங்குகிருர் பாகிஸ்தான் கோஷ்டிக்கு பாக். வெளிவிவகார மந்திரி ஜனுப் புட்டோ தலைமைவகிக்கிருர்.

## பாரத என்ஜினியர்கள் சாதனை

புதுடில்லி, ஏப். 18

பாரத என்ஜினியர்கள், முதன் முதலாக டிரான்ஸ்போமர்களை வெற்றிகரமாகத் தயாரித்து பரீட்சை செய்துள்ளனர். நாட்டில் முதன்முதல் தயாரிக்கப்பட்ட டிரான்ஸ்போமர்களைத் தயாரித்து பரீட்சை பண்ணிய பெருமை போப்பால் கனரகஎன்ஜினியர்களைச் சாரும்.

## காவிரியில் ராஜன்பாபு அஸ்தி

பங்களூர், ஏப்ரல் 18

காலஞ்சென்ற, டாக்டர் ராஜேந்திரப்பிரஸாத்தின் அஸ்தியைக் காவிரியில் கரைக்கும் பொருட்டு, அது பங்களூருக்குக் கொண்டுவரப்பட்டது. நாளை அஸ்தி காவிரியில் கரைக்கப்படும்.

## சென்னை கவர்னர்

சென்னை, ஏப்ரல் 18

உதகமண்டலம், கோடைக்கானல் ஆகிய இடங்களிலுள்ள தமது சுகவாசஸ்தலங்களில் முகாம் செலவைக்குறைத்துக் கொள்ள சென்னை கவர்னர் திரு. மேதி முன்வந்திருக்கிருர். சொற்ப எண்ணிக்கைகொண்ட முகாம் சிப்பந்திகளை மட்டுமே கவர்னர் இனி இங்குஅழைத்துச் செல்வார்.

## "விஸதரிக்க வேண்டாம்"

புதுடில்லி, ஏப்ரல் 18

டில்லியில் மதுவிலக்கை விஸ்தரிக்க வேண்டாம்என அரசாங்கம் கோரியுள்ளது இதன் மூலம் ரூ. 32 லட்சம் மிச்சம் கிடைக்கும.

# 'காஷ்மீரை பிரித்தால் வேறுபிரச்னைதோன்றும்'

## வெளிநாட்டு நிருபருக்கு பிரதமர் நேரு பேட்டி

### 'அபிவிருத்திப் பாதையை தடை செய்வதே சீனவின் நோக்கம்'

புதுடில்லி, ஏப்ரல் 18

**வெளிநாட்டு நிருபர் ஒருவருக்கு பாரதப் பிரதமர் நேரு அளித்த ஒரு பேட்டியில், காஷ்மீரைப் பிரிப்பதனுல் வேறு பல பிரச்னைகள் தோன்றலாம் எனத் தெரிவித்துள்ளார்.**

காஷ்மீரைப் பிரிப்பதனுல் காஷ்மீர் பிரச்னைகளைத் தீர்த்துவிடலாம் என்று கருதினுல், அது தகராறுகளையும் பிரச்னைகளையும் மேலும் அதிகரிப்பதற்கு வழிகோலுவதாகவே முடியும் என்றும் நேரு அந்தப் பேட்டியில் கூறினுர்.

வெளிநாட்டு நிருபருக்கு அளித்த ஒரு பேட்டியில் பாரதப் பிரதமர் நேரு மேலும் தெரிவித்ததாவது:-

"காஷ்மீர் பிரச்னை விரைவில், சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டியதோர் பிரச்னையாகும். ஆனுல், சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தத்தினுல், பாகிஸ்தான்–இந்திய காஷ்மீர் பிரச்னை விரைவில் தீர்க்கமுடியாததொன்ருகவிருக்கிறது. பாகிஸ்தான்–சீன எல்லை ஒப்பந்தம் இந்தச் சமயத்தில்; பாகிஸ்தான்–இந்திய காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்படாமலிருக்கையில், செய்துகொண்டது, பெரும் வருத்தத்தை எமக்குக் கொடுத்திருக்கிறது.

அபிவிருத்தித் துறையில் இந்தியா முன்னேக்கிச் சென்றுகொண்டிருப்பதை சீன விரும்பவில்லை. பாரதத்தின் அபிவிருத்திகளுக்கு முட்டுக்கட்டையாகவிருக்கவே சீன விரும்புகிறது. பொருளாதார அபிவிருத்தி பாதையிலிருந்து எம்மை வேறு வழியில் திருப்பிவிடவே சீன முயற்சி செய்துவருகிறது.

பாரதத்தின் நேச நாடுகள், பாரதத்துக்குத் தேவையான உதவிகளை அளிக்க முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமே. இருந்தபோதிலும் நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவதில் பாரத மக்கள் மிகுந்த அக்கறை காட்டிவருகின்றனர். இதனுல் எமக்குத் தேவையானவற்றை எமது நாட்டிலே உற்பத்திசெய்ய வழிபிறக்கிறது.

பாரதத்துக்கு குறுகியகாலத்தில் உதவிகளை அளிக்க அமெரிக்கா முன்வந்திருக்கிறது. குறுகிய காலத்தில் அதிகமான பொருள்களை உதவ அமெரிக்கா முன்வந்திருந்த போதிலும் எமது நாட்டிலே எமக்குத் தேவையான எல்லா பொருள்களையும் உற்பத்தி செய்ய அமெரிக்கா உதவும் என்றே கருதுகின்ருேம். வெளிநாட்டு உதவிகளை எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைவிட, வெளிநாட்டு உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு எமது நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதே பாரதத்தின் கொள்கையாகும். இந்த நோக்கத்தையறிந்தே வெளிநாடுகளும் பாரதத்துக்கு உதவிகள் அளிக்கின்றன."

## கம்பியின்றிப் பாயும் மின்சாரம்

நியூயார்க், ஏப். 18

கம்பியில்லாமலேயே மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்குப் பாயவைக்கும் முறையைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகள் பெருமளவு வெற்றி கண்டுள்ளனர்.

இந்த கண்டுபிடிப்புப் பற்றி அவர்கள் மின்சார மின்னணு என்ஜினியர் கழகத்துக்குத் தெரிவித்துள்ளனர். கம்பியின்றி மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்கு பாயவைப்பதில் இந்த விஞ்ஞானிகள் 70 சதவிகித அளவுக்கு வெற்றி பெற்றுள்ளதாக இக்கழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புருட் சர்வகலாசாலையைச் சேர்ந்த ஆர். எச். ஜார்ஜ், இ. எம். சப்பாக் ஆகிய விஞ்ஞானிகளும் இவ்வித சாதனையைப் புரிந்துள்ளனர்.

கம்பியின்றி மின்சாரம் அனுப்பும்முறையை 90 சதவிகித அளவுக்கு அபிவிருத்திசெய்ய இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கு முன்பாக எந்த விஞ்ஞானிகளாலும் இந்த முறையை 30 சதவிகித அளவுக்கு மேல் அபிவிருத்தி செய்ய முடியவில்லை.

இது முழு அளவில் வெற்றிபெறுமானுல் வான வெளிக் கப்பல்களுக்கும், உலகில் மின்சார வசதியற்ற பகுதிகளுக்கும் கம்பி இல்லாமலேயே ரேடியோ அலைகளைப் போலவே மின்சாரத்தையும் அனுப்புவது சாத்தியமாகிவிடும்.

## இந்தோனேஷிய கம்யூனிஸ்ட்கள்

சிங்கப்பூர், ஏப்ரல் 18

இந்தோனேஷியகம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளை இந்தோனேஷிய ராணுவம் உஷராகக் கண்காணித்து வருகிறது.

சமீபத்தில் இந்தோனேஷிய அரசாங்கத்துக்கு எதிராக பாண்டுங். மத்திய ஜாவா ஆகிய பகுதிகளில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். விலைவாசி உயர்வை எதிர்த்தும், சுகர்ணேவின் மந்திரி சபையில் கம்யூனிஸ்டுகளுக்கு இடம்அளிக்க வேண்டுமென வற்புறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இந்த ஆர்ப்பாட்டங்களில் கம்யூனிஸ்டுகள் சம்பந்தப்பட்டிருப்பதாக ராணுவ அதிகாரிகள் சந்தேகிப்பதாக மலாயா வழியாக சிங்கப்பூருக்கு தகவல் கிடைத்துள்ளது இதன் காரணமாகவே கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டுவருகின்றன.

# ஜார்ஸ் சமவெளியில் நடுநிலைமை படைகள் வாபஸ்

## லாவோஸில் தொடர்ந்து சண்டை

லண்டன், ஏப். 18

**லாவோஸில் சண்டைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஜார்ஸ் சமவெளியில், நடுநிலைமை துருப்பினர்கள் பதட்லாவோ துருப்புக்களினுல் சூழப்பட்டிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.**

அண்மையில் ஜார்ஸ் சமவெளிக்குச் சென்று திரும்பிய லாவோஸ் பிரதமர் சுவர்ணபூமா, லாவோஸில் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பதாகவும், பதட்லாவோ படைத் தலைவர் ஜெனரல் சிங்காபோ, நடுநிலைமை ராணுவ தலைவர் ஜெனரல் காங்லீ, நடுநிலைமை அதிருப்தியாளர் கர்னல் புயானியோ ஆகியோர் தற்காலிக போர் நிறுத்தத்துக்கு இணக்கம் தெரிவித்துவிட்டார்களென்றும் அறிவித்திருந்தார். ஆனுல் இந்த அறிவிப்பு வெளியான இரண்டு நாட்களுக்குப் பின்னர் லாவோஸில் சண்டை ஆரம்பமாகிவிட்டது.

**நடுநிலைமை துருப்புகள் வாபஸ்**

லாவோஸில் ஜார்ஸ் சமவெளி பிரதேசத்தில் முப்பது மைலுக்கு வடக்குப் பகுதியில் பதட்லாவோ படைகள் முன்னேக்கி வந்த காரணத்தினுல், இப்பகுதியில், நடுநிலைமைப் படைகள் வாபஸ்வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

**பதட்லாவோ படையினர்**

ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் நடுநிலைமைப் படைகள் பதட்லாவோ படைகளினுல் சூழப்பட்டிருப்பதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன இப்பகுதியில் நிலைமை மோசமாகவிருப்பதாகவும், நடுநிலைமைப் படைகள் வாபஸாகிக்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

**நடுநிலைமை ராணுவ தலைவர்**

நடுநிலைமை ராணுவத் தலைவர் ஜெனரல் காங்லீ, நேற்று நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில் தெரிவிக்கையில், ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் நடுநிலைமைத் துருப்புக்கள் பதட்லாவோ துருப்புக்களினுல் சூழப்பட்டிருப்பதாகவும் பதட்லாவோ துருப்பினர் தமது தலைமைக் காரியாலயத்திலிருந்து 30 மைல் தூரத்தில் சூழ்ந்துகொண்டதால், ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் நடுநிலைமைப் படைகள் வாபஸாக வேண்டிய நிலை ஏற்பட்டதென்றும் கூறினர்.

**சுவர்ணபூமா சனியன்று செல்வார்**

அண்மையில் ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்துக்கு விஜயம்செய்து திரும்பிய லாவோஸ் பிரதமர் சுவர்ணபூமா, எதிர்வரும் சனிக்கிழமை ஜார்ஸ் சமவெளிக்குச் செல்வார். பிரதமர் சுவர்ணபூமாவுடன், பிரிட்டிஷ் சோவியத் தூதர்களுடன் வேறு சில அதிகாரிகளும் செல்வார்கள்.

## ரயில்வே வாரம்

புதுடில்லி, ஏப். 18

புதுடில்லியில் கொண்டாடப்பட்ட ரயில்வே வாரம் நேற்றுடன் முடிவடைந்தது ரயில்வே ஊழியர் சிலருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## லாவோஸுக்கு சீனரஸ்தா

புதுடில்லி, ஏப்ரல் 18

சீனவிலுள்ள யூனன் மாகாணத்திலிருந்து லாவோஸுக்கு இணைப்புசாலை ஒன்றை சீன நிர்மாணித்திருக்கிறது. இதன் நீளம் 50 மைல்.

### மணி வாக்கு

நாகரிகம் என்பது தேவைகளை அதிகரித்துக் கொள்வதில்லை. நாமாகவே நமது தேவைகளைக் குறைத்துக் கொள்ளுவதில்தான் அது அடங்கியுள்ளது. உண்மையான இன்பத்துக்கும் மனத்திருப்திக்கும் இது வழிகாட்டுவதுடன் சேவைக்கான திறமையையும் வளர்க்கின்றது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU, National Tami Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 6 உ (19-4-63)

## சிரமதானம்

கிளிநொச்சி உருத்திரபுரத்திலே இன்று ஆரம்பமாகும் சர்வோதய சிரமதான இயக்கம், சிறப்பாக இப்பகுதியிலுள்ள மக்களுக்குப் பலவிதங்களிலும் மேலான புதிய வழிகாட்டி நன்மை புரியுமென்றே நம்புகிறோம்.

'சிரமதானம்' என்ற சொல்லுக்கு இலவச உழைப்பு என்று கொள்ளலாம். உடலால் உழைப்பதென்பது குறித்து, நம்மிடையே (ஆங்கிலம்) படித்தவர்களுக்கு ஒரு தவறான கருத்து இருந்து வருகின்றது. உடல் உழைப்புக்கான தொழில் மிக இளப்பமானதென்றும், படிப்பற்ற பாமரர்கள் செய்யவேண்டியதென்றும், படித்தவர்கள் உடல் உழைப்பு வேலை செய்வது மரியாதையாகாதென்றும் ஓர் ஆபத்தான எண்ணம் எப்படியோ நம் சமூகத்தில் புகுந்துவிட்டது. உடல் உழைப்பாளர்களும் கூட, கூலிக்காகத்தான் அவ்விதம் செய்கின்றனர். அதை இலவசமாக, தியாகமாகப் பிறருக்குச் செய்யலாமென்று கருதுவதில்லை.

கூடாத இக்கருத்துக்களைத் தகர்த்து, உடல் உழைப்பின் மேன்மையையும் அதை அன்பு, தியாகம், சேவை என்ற உள்ளத்துடன் செய்ய வேண்டிய பண்பினையும், மகாத்மாகாந்தியும் வினோபாபாவேயும் அறிவுறுத்தும் இந்தப் புதுமை இயக்கம் இங்கு நடைபெறுவது, நம் சமூக வாழ்விலே நம்மனப்பான்மையிலே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். இன்று சமூகம், பாட்டாளிகள் என்றும் மற்றவர் என்றும் இரண்டாகப் பிளவுபட்டுப் பலைல புரட்சி இயக்கங்கள் கிளம்பி நம்மைப் பயமுறுத்துகின்றன. எல்லாருமே பாட்டாளிகளாகவும் தம் உழைப்பினை கூலிக்காக அன்றி அன்புச் சேவைக்காகவும் நல்க முன்வருவதாயின் சமூகத்திலே உள்ள இடப்பிளவுகள் நீங்கவும் மக்களிடையே அன்பின் அடிப்படையில் புதிய ஒற்றுமை ஏற்படுவதற்கும் இது வழி செய்யலாம்.

இன்றைய சமூகத்திலே மக்களிடையே பல ஏற்றத்தாழ்வுகளுள்ளன. இதில் வேற்றுமைகள் தான் மக்களிடையே மனக்கசப்புணர்வை வளர்த்து பலாத்[illegible]கிச்சும் தூபம்போடுகின்றன. ஏழை பணக்காரன், படித்தவன் பாமரன், முதலாளி தொழிலாளி, தமிழர் சிங்களவர் என்றும் இன்னும் வேறு பிரிவினைகளும் நாம் ஒற்றுமையாக வாழ முடியாமல் தடுக்கின்றன. சிரமதானம், பூமிதானம், வித்யாதானம், சம்பத்தானம் முதலிய இயக்கங்களால் அன்புச் சேவையின் அடிப்படையிலே புதிய சமுதாயத்தை உருவாக்க ஆச்சார்ய வினோபாபாவே முன்வந்து வழிகாட்டுகின்றார். அவரைப் பின்பற்றி இப்போது உருத்திரபுரத்தில் ஆரம்பித்துள்ள இந்த இயக்கம், இப்புதுக் கருத்துக்களை நம்மிடையே பரப்பி அன்பு, தியாகம், சேவை இவை நம்வாழ்விலே இடம்பெறுமாயின், நம் பிரச்னைகளெல்லாம் ஆக்க முறையில் தீர்வும் எல்லோரும் இன்புற்று வாழவும் நிச்சயம் வழிபிறக்கும்.

—

## அவசரகாலம்

சென்ற புதன்கிழமையுடன் இலங்கையிலே அவசரகாலத்துக்கு இரண்டாண்டுகள் முடிந்து மூன்றும் பிராயம் பிறந்துள்ளது. இதன் ஆயுள் இன்னும் எவ்வளவு என்பது தெரியவில்லை. அவசரகாலத்துக்கு இன்று அவசியமே இல்லை என்று பலர் கூறியும் மாதாமாதம் சற்றும் கூச்சமின்றி இதை அரசாங்கம் நீடித்துவருகின்றது. இப்படி நீடிப்பது, அரசாங்கம் தனது தோல்வியை ஒருவிதத்தில் ஒப்புக்கொண்டதாகும்.

அவசியத்தை உணர்ந்தே அரசாங்கம் இவ்விதம் செய்து வருகின்றதேயன்றி, காரணமில்லாமல் இருக்கமுடியாது சத்தியாக்கிரகத்தை அடக்கவே இரண்டு வருடங்களுக்கு முன் அரசாங்கம் இந்தப் பிரகடனம் செய்தது. பிரகடனம் செய்ததும், இது தங்களுக்கு ஒரு வெற்றி என்று தமிழரசுக் கட்சியினர் கூறி அந்த இயக்கத்தை நிறுத்தி வைத்தனர். இப்போது நேரடி நடவடிக்கையை ஒத்திவைத்ததற்கும் இந்த அவசரகாலப் பிரகடனமே காரணமாக இருப்பின் அதில் வியப்பில்லை.

அவசரகாலம் முடிந்தால் மீண்டும் தமிழரசுக் கட்சி நேரடி நடவடிக்கையை ஆரம்பிக்ககூடும். இதற்கஞ்சியே அரசாங்கம் அவசரகாலத்தை நீடித்து வருகின்றதுபோலும்.

காரணம் எதுவாயினும் அவசரகாலத்தை, இப்படி நீடிப்பது இந்த அரசாங்கத்துக்கோ, நாட்டுக்கோ நல்லதல்ல. தமிழ் பேசும் மக்களின் குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்க உடன் முயற்சி எடுப்பது அரசாங்கத்தின் கடமை. அப்போதுதான் நாட்டில் சமூகஒற்றுமையும், அதனால் அபிவிருத்திகளும் ஏற்பட முடியும். அவசரகாலத்தை காலவரையறையின்றி நீடித்துக்கொண்டு போவது இந்த அரசாங்கத்துக்குப் பெருமையையோ, நிம்மதியையோ அளிப்பதற்கில்லை. இது ஜனநாயகத்துக்கும் முற்றிலும் மாறுதும்.

—

நாவலப்பிட்டி, வியாழன்

கொத்மலை வீதியிலுள்ள நாவலப்பிட்டி கூட்டுறவுக் கடையில் ஷேர்ட்டுக்கள், துணிமணிகள், உணவுப்பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வோதய இயக்கம் ஒருமைப்பாட்டை வளர்க்கும்

## திரு. நேசையா அறிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

சர்வோதய சிரமதான இயக்கத்தில் தென் இலங்கை, வட இலங்கை மக்கள் சேர்ந்து உழைப்பதால் தேசியஉணர்ச்சிகள் வளரும். பரஸ்பரம் அன்பும் விசுவாசமும் ஏற்படும் ஒருவர் குறைகளை மற்றவர் உணரவும் அகற்றவிமோசனம் கிடைக்க உதவும் மனநிலையும் வளரும் தன் சமூகத்துக்குத் தொண்டாற்றும் பண்பும் வளரும். இதன்மூலம் நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சி வளர வாய்ப்பாகும். இவ்வாறு அகில இலங்கை காந்திய சேவாசங்கத்தலைவர் திரு. கே. நேசையா விடுத்துள்ள பத்திரிகைச் செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள்களுக்கான சிரமதான இயக்க முகாம் ஒன்று நடத்தப்பட விருப்பதாகவும், இந்த முகாமின்போது உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திற்கு அரைமைல் நீளமான வீதி ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த சிரமதான இயக்க முகாமை அகில இலங்கை காந்திய சேவாசங்கம், சர்வோதய சிரமதான இயக்கம், கிறிஸ்தவ இயக்கம் ஆகிய மூன்று இயக்கங்களும் இந்த சிரமதான இயக்க முகாமை கூட்டாக நடத்தத் தீர்மானித்துள்ளன. இந்த இயக்க முகாமில் 50 தொண்டர்கள் பங்குபற்றவிருக்கிறார்கள். இவர்களில் பாதிப் பகுதியினர் தென் மாகாணத்திலிருந்துவரும் சிங்களம் பேசும் தொண்டர்களாகவும், 25 பேர் தமிழ்ப்பேசும் தொண்டர்களாகவும் இருப்பார்கள். இத்தொண்டர்களுடன், கிளிநொச்சிப் பகுதிகளில் உள்ள குடியேற்றவாசிகளும் கலந்துகொண்டு தெரு அமைப்பதற்கு உதவிபுரிவார்கள்.

இன்று வெள்ளிக்கிழமைகாலை ஒன்பது மணியளவில் சிரமதான இயக்கத்தின்கீழ் தெரு அமைக்கும் வேலையை வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சியும், கிளிநொச்சி எம். பி. திரு. ஏ. சிவசுந்தரமும் அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்கள். இயக்கத்தின் இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமை மாலை சர்வோதய மகாநாடு ஒன்று நடைபெறவிருக்கின்றது. பொதுக்கூட்டங்களும் இம்மூன்று நாட்களிலும் நடைபெறும். எல்லாக் கூட்டங்களும், மகாநாடும் இருமொழியிலும் நடாத்தப்படும். தெரு அமைப்பதற்கான திட்டத்தை செயல்படுத்தவும், மகாநாட்டில் கலந்துகொள்ள வருபவர்கள் தங்குவதற்கான ஒழுங்குகளையும் கிளிநொச்சிப்பகுதி காரியதரிசி தலைமையில் உள்ளூர் கழகங்கள் கவனித்து வருகின்றன.

# தமிழியக்கத்தில் உள்ளூராட்சி மன்றங்கள்

## பட்டிருப்பு எம். பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

"உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் தமது கருமங்களைத் தமிழிலேயே செய்து எல்லாம் தமிழ் இயக்கத்தை வலுவுள்ளதாக்கவேண்டும்" என்று தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் தமது வேண்டுகோளில் எல்லாம் தமிழியக்கத்தை வெற்றிகரமாக நடத்துவதே அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள் விடுக்கக் கூடிய சவாலாக இருக்குமெனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

எல்லாம் தமிழியக்கம் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல சிங்கள மக்களிடையேயும் ஓர் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழிலே நாம் சமது தொடர்புகளை வைக்கும்போது, உத்தியோக நோக்கத்துடன் பார்க்கும்போது தமிழ் எல்லாக் காரியாலயங்களிலும், தமிழிலும் செயலாற்றவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் சிங்களம் மட்டும் கொள்கையினால் தமிழைப் படிப்படியாக அழிக்க வெண்டுமென்ற அரசாங்கத்தின் நினைவு பாழாகின்றது. ஆங்கிலத்தில் தொடர்புகொள்ளும்போது சிங்கள உத்தியோகஸ்தர்கள் அதற்கு நடவடிக்கையெடுக்கக்கூடியநிலையிலிருக்கும். ஆனால் தமிழில்தொடர்பு கொள்ளும்போது அதற்குத் தமிழ் உத்தியோகஸ்தர்களே தேவைப்படுவார்கள்.

சிங்களம் தமிழை ஒதுக்குவதனைவிட தமிழ் எங்கும் விஸ்தரிக்கப்பட்டுச் செல்லும் நிலை உருவாகிறது. வியாபாரத் தொடர்பு உள்ள தமிழ் மக்கள் அதிகமாக ஆங்கிலத்திலேயே இதுவரையும் தமது தொடர்புகளைக்கொண்டிருந்தனர். அவர்கள் தமிழில் தமது தொடர்புகளை வைக்கத் தொடங்கும்போது கொழும்பிலும், ஏனைய இடங்களிலுமுள்ள வியாபார நிலையங்கள் தமிழிலேயே தங்களுடைய வாடிக்கைக்காரர்களுடன் தொடர்புகொள்ளவேண்டிய நிலையேற்படும்.

சிங்கள மக்கள் நடத்திவரும் ஸ்தாபனங்களில் பொருள் வாங்கும் தமிழர்களிடம் தமிழிலேயே தொடர்பு கொள்ள வேண்டிய நிலை உருவாகும்.

சிங்களம்மட்டும் என்ற கொள்கைக்கும் அரசாங்கத்திற்கும், தமிழியக்கமே அதற்கு மறுமொழியாக அமையும். எம்மைப் பொறுத்தவரையில் இவ்வியக்கம் ஒரு புனிதத்தன்மையை எம்மிடம் பரப்புகிறது. இவ்வியக்கம் தமிழ் மக்களை உள்ளத்தினால் ஒன்றுபடுத்தும் நிலையையும் உருவாக்குகிறது. மனவலிவும் துணிவும் ஏற்படுகின்றன. சமூகத்திலே ஒரு புத்துணர்ச்சியும் செழிப்பும் ஏற்படுகின்றது. எனவேதான் இவ்வியக்கத்தை ஆரம்பஆயமாக ஒவ்வொரு தமிழ்மகனும் ஏற்றுக்கொண்டால் தனது இல்லத்திலோ, வியாபாரஸ்தாபனத்திலோ அன்றி வேறு எந்தப் பொதுச் சேவையிலோ ஈடுபட்டுள்ளவர்கள் தமது கடமைகளைச் சமூகத்திற்குச் செய்து வைகலாம். ஒருவரையொருவர் சந்திக்கும் போது தமிழில் வணக்கம் கூறிக்கொள்வதிலும், தமிழிற் சம்பாஷித்தலும் ஓர் முன்மாதிரியாக அமையும்.

எல்லாம் தமிழியக்கம் வளரும் இயக்கமாகும். இந்நாட்டில் எல்லாத் தமிழ் மக்களும் தமது தொடர்புகளைத் தமிழில் வைக்கும்வரை வளர்ந்துகொண்டே போகவேண்டும். அமைதியாக ஒவ்வொருவரும் தமது தொண்டை இவ்வகையில் செய்யலாம். இதுதான் சிங்களம்மட்டும் சட்டத்திற்கு நாம் விடுக்கக்கூடிய சவாலாகும்.

—

களனி, வியாழன்

இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத்தின் மரணம் குறித்து வித்தியாலங்கார பல்கலைக்கழகம் அனுப்பிய அனுதாபச் செய்தியைத் பிரதமர் நேருநன்றி தெரிவித்துள்ளார்.

## ஐயாறன்

எழுதுவது

"அன்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் கூடியிருந்த கூட்டம் ஜி. ஜி.யைப் பார்ப்பதற்காக வந்தது. ஆனால்முந்தாநாள் தமிழரசுக் கட்சியினர் நடத்திய கூட்டத்துக்கு மக்கள் 'கேட்க' வந்தார்கள்" என்று இரு கூட்டங்களுக்கும் சென்ற ஓர் அன்பர் தெரிவித்தார்.

அவசரகாலஆட்சியின் இரண்டாவது ஆண்டு விழாவை தமிழரசுக்கட்சியினர் தங்களது ஒரு வெற்றி விழாவாகக் கொண்டாடினர். பல இடங்களிலிருந்தும் பல ஊர்வலங்கள் முற்றவெளியை நோக்கி அமைதியாகச் சென்றன. பல சுலோகங்களைத் தாங்கிய அட்டைகளுடனும், மூவர்ணக் கொடிகளுடனும் ஊர்வலங்கள் சென்ற காட்சி சத்தியாக்கிரக காலத்தை ஞாபகமூட்டுவதாக இருந்தன.

* * *

சாத்தியாக்கிரகம் தோற்றதா? வென்றதா? அது தோற்றுவிட்டதாக சில அரசியல் வட்டாரங்கள் கூறினும் அன்றைய கூட்டத்தைப் பார்த்ததில் அது தோற்றதாகத் தெரியவில்லை. அவசர காலத்தைப் பிரகடனம் செய்து அதை இரண்டு வருடங்களாக அரசாங்கம் நீடித்து வருவதே தங்கள் இயக்கம் வெற்றி பெற்றதற்கு அத்தாட்சி என்று ஒருவர் கூறினார்.

"தமிழ் மொழியை அங்கீகரிக்கவே முடியாதென்று முன்னர் பார்லிமெண்டில் கூறிய எம். ஈ. பி. பிவிப, இப்போது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழை நிர்வாக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் ஏற்கவேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து ஒப்புக்கொள்ள முன்வந்தது யாரால்? தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகத்தால் அல்லவா?" என்று கேட்டார் வட்டுக்கோட்டையார்.

* * *

மட்டக்களப்பு எம். பி. இராஜதுரையும் இக்கூட்டத்தில் பேசுகிறாரென்பதை அறிவித்ததும் மக்கள் உற்சாகத்தால் நீண்ட கரகோஷம் செய்தனர். அவரைப்பற்றி பல பல வதந்திகள் அடிபட்டன. அந்த வதந்திகளையெல்லாம் அவர் அக்கூட்டத்துக்குவந்து பேசியதின் மூலம் பொய்யாக்கிவிட்டார். அவரது பேச்சை மக்கள் கேட்க மிக ஆவலாக இருந்ததால் அக்கூட்டத்தில் பேச இருந்த பல தலைவர்கள், பேசாமல் ஒதுங்கி, அவருக்கு இடம் கொடுத்தனர்.

* * *

வடக்குக்கும் கிழக்குக்கும் ஒற்றுமை பலப்பட்டு வருகிறதென்பதை அக்கூட்டம் நிரூபிப்பதாக இருந்தது. கிழக்கைச் சேர்ந்த ஒருவர் கூட்டத்துக்குத் தலைமை வகிக்க மற்றொருவர் நீண்டநேரம் பேசி, பிரிவினை சக்திகள் தோற்பது உறுதி என்றார். அவரது பேச்சைக் கேட்ட ஓரன்பர் சுரண்ட் இழுப்பதுபோல், மனதை இப்பேச்சு இழுப்பதாகவும் அதை விட்டுவிட்டு வரவே மனமில்லை என்றும் சொன்னார்.

நேரடி நடவடிக்கையை ஒத்திப் போட்டுள்ளதுடன் இப்பகுதிகளில் பொருளாதார அபிவிருத்தியில் இனி கூடிய கவனம் செலுத்துவதென்றும் வட்டமேசைகளுக்குத் தாங்கள் முட்டுக்கட்டையாக இருக்கப் போவதில்லை என்றும், ஆனால் தமிழர் தங்கள் உரிமையைப் பெறும்வரை போராட்டத்தைக் கைவிட முடியாதென்றும்கருத்துப்படப் பலரும் உணர்ச்சியுடன் உறுதியாகப் பேசினர்.

* * *

மூலநோய் தீர்க்கும் முதல்வனைக் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்
ஆலின்கீழ் நால்வர்க்கறத் தான் கண்டாய்

(5ம் பக்கம் பார்க்க)

# ‘பொருளாதார விருத்தியில் கவனம் செலுத்த வேண்டும்’

## முற்றவெளிக் கூட்டத்தில் திரு. கந்தையா பேச்சு

### “தூயகொள்கை வெற்றிபெற்றுத் தருவது நிச்சயம்”

— திரு. நவரத்தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

‘தமிழ் மக்கள் பொருளாதாரத்தில் சுயாதீனமுள்ளவர்களாக வாழ்வதன் மூலமே சுதந்திர முடையவர்களாக வாழமுடியும். எமது நாட்டில் நாம் நமது உழைப்பின் மூலம் வாழக்கூடிய வசதி ஏராளமாக உண்டு’ என்று ஊர்காவற்றுறை எம். பி. திரு. வீ. ஏ. கந்தையா கோட்டை மைதானத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற சத்தியாக்கிரக நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை விருத்தி செய்யக் கூடிய வழி வகைகளில் நாம் முதலில் கவனம் செலுத்தவேண்டும். பொருளாதாரசுபிட்சம் எமக்கு வேண்டும். அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைக்கும் என இனி எதிர்பார்க்க முடியாது. தொழில்வளத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சோர்வு மனப்பான்மை தொழில் வளத்தைக் கெடுத்துவிடும். ஒவ்வொருவரும் தமது உழைப்பினுல் நாட்டை உயர்த்திவிட நினைத்தால் அது சாத்தியமாகிவிடும் வாழ்க்கையில் நாம் பிறர் கையை நம்பியிருக்காது எமது ஆற்றலைச் சரியான வழியிலே பயன்படுத்த வேண்டும்.

### தீவுப்பகுதியில் ஆரம்பம்

தீவுப்பகுதிகளில் மக்கள் இந் நாட்டின் பொருளாதார வளத்திற்காக உழைக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் தமது உறுதியினுல் நம்மை நாமே ஆளக்கூடிய தான சூழ்நிலையை ஏற்படுத்த முன்வந்துள்ளனர். பொருளாதாரத்துறையில் நாம் அடைந்துவிடும் முன்னேற்றம் தான் எமது விடுதலை இயக்கம் வெற்றியடையச் சிறந்த வழியாகும்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

ஏப்ரல் மாதம் 17-ம் திகதி தமிழ் மக்களிடையே புதிய உணர்ச்சியை, உத்வேகத்தை ஏற்படுத்திய நாளாகும். ராணுவ மிருகபலத்தால் தமிழ் மக்களை அடிபணியவைத்துவிடமுடியாது என்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளது. சிங்களம் மட்டும் சட்டத்தை பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்த்ததன் விளைவுதான் ‘இன்னும் நாம் அடிமைகளாக வாழாமல் இருப்பதற்குரிய காரணமாகும். சிங்கள மக்களிடம் கையேந்தி பிச்சை கேட்கும் நிலையில் இருக்ககூடாது.

### பார்லிமெண்டில் இருப்பது ஏன்?

சிங்களமக்களின் பெரும்பான்மையான பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இருப்பதனுல் சிறுபான்மையினராகிய எங்களால் என்னசெய்யமுடியும் என்று கேட்கப்படுகிறது. நாம பாராளுமன்றத்தில் இருப்பது பதவிகளுக்காக அல்ல. தமிழ் மக்களுக்கு சிங்கள அரசாங்கம் செய்கின்ற அநீதிகளை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காகவே நாம் பாராளுமன்றத்தில் இருக்கின்றோம். எமது உரிமைகளைப் பெற நாம் நீதிமன்றத்தில் குரல் எழுப்பியும் பயன் ஏற்படவில்லை. நாம் நமது உரிமைகளைப் பெற இரண்டு வழிகள்தான் உண்டு. இரத்தம சிந்தி போராடுவதும் சாத்வீக எதிர்ப்பும்தான் நமக்கு முன்னுள்ள பாதை. இரத்தஞ் சிந்தி போர் செய்யும் முறை பொருந்தாது. சாத்வீக எதிர்ப்புத்தான் நமக்கு உரிமைகள் பெற்று தரக்கூடியது.

‘தமிழ் மக்கள் ஆரம்பதில் எதிர்ப்பார்கள் பின்னர் பணிந்துவிடுவார்கள்’ என்று கடந்த காலச் சம்பவங்களைக் கொண்டு எண்ணியிருந்த சிங்கள அரசாங்கத்திற்கு அந்த எண்ணம் பிழையானது என்ற எண்ணத்தை ஏற்படுத்தியவர்கள் தமிழரசுக் கட்சியினரே. 1956-ம் ஆண்டு சிங்கள மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்று தொட்டு தமிழரசுக்கட்சி செய்து வந்த எதிர்ப்பின் பயனைத்தான் காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயகா எம்முடன் ஒப்பந்தச் செய்ய முன் வந்தார். ஆனல் அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டு விட்டது. அவர்கள் எம்முடன் செய்த உடன்பாடுகளை மீறி விட்டனர்.

### சோர்ந்து விடக்கூடாது

தமிழ் மக்கள தமது எதிர்ப்புணர்ச்சியைச் சோரவிட்டு விடக்கூடாது. சோர்வுணர்ச்சியை ஏற்படுத்துபவர்கள் நாட்டின் துரோகிகளாவர். துரோகிகளுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டியது மக்களுடைய கடமையாகும். மக்கள் தமது மனதில் குழப்பத்திற்கு இடம் கொடுக்ககூடாது

நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் பேசுகையில் கூறியதாவது:

சோஷலிஸம் என்ற போர்வையில் இன்றுள்ள அரசாங்கம் பிற்போக்கு வேலைகளில் ஈடுபட்டுள்ளது. ஜனநாயகத்திற்கு விரோதமான செயலிலேதான் இன்றுள்ள அரசாங்கம் ஈடுபடுகிறது. பொருளாதார ரீதியிலே நாம் துரிதமாக முன்னேற வேண்டும்.

### ஜனநாயக முறையில் எதிர்ப்பு

ஜனநாயகத்தின் கீழ் ஒரு கிராமத்திலோ பட்டினத்திலோ வாழ்கின்ற மக்களுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் திருப்தி ஏற்படாவிடினும் அவர்கள் கூட்டம் கூடி தமது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பர். ஆளும் கட்சியி மக்களின் எதிர்ப்புக்குரலைக் கேட்டு தனது தவறுகளைத் திருத்தும். இது ஜனநாயக அரசாங்கத்தின் கடமையாகும். ஆனல் இலங்கை அரசாங்கம் இதற்கு மாறுக தனது எதிர்ப்பை ஜனநாயக முறையிலே தெரிவித்துள்ளது.

### தலைவர்கள் ஒற்றுமை

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபடுவதின் மூலமே தமிழினம் விடுதலை பெற முடியும் என்பது தவருன எண்ணமாகும். தமிழ் மக்கள் அனைவரும் ஒரே கட்சிக் கொள்கையுடன் இணைந்தால் இன விடுதலை கிடைத்துவிடும். தமிழ் மக்கள் தன்னலம் கருதாத தியாக சிந்தையுள்ள தலைவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிச் செல்லுதல் அவசியமாகும். தூயகொள்கை இருப்பின் வெற்றி நிச்சயம். ஆதமசுத்தியுடன் கூடிய இயக்கத்தில் மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும்.

சத்தியாக்கிரகத்தின் போது நாம் சேர்த்த பணம் எங்கே என்று கேட்கிறார்கள். நாம் சேர்த்த பணத்திற்கும் செலவு செய்த பணத்திற்கும் கணக்குகள் உண்டு கட்சி சேர்த்த பணத்தை வெளி நபர் ஒருவர் பரிசீலனை செய்து கட்சி உறுப்பினர்களுக்கு கணக்குகள் காட்டப் படுகின்றது. உலகில் உள்ள எந்தக் கட்சியாவது இவ்வாறு செய்வதில்லை. அவ்வாறு செய்த ஒரே கட்சி தமிழரசுக் கட்சிதான்.

### பொறுப்பை தட்டிக்கழிக்காது

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை பேசுகையில் கூறியதாவது:-

வடக்கு, கிழக்கு மாகாண மக்களை ஒரு கொள்கையின் கீழ் ஒன்றுபடுத்திய பெருமை தமிழரசுக் கட்சிக்கு உண்டு. இப்போது மலையக மக்களையும் தன்பால் ஈர்த்துக்கொள்ளும் ஆற்றலை நமது கட்சி பெற்றுள்ளது. 1956-ம் ஆண்டில் தமிழ் மக்களின் தலைவிதி தமிழரசுக் கட்சியிடம் 2 இலட்சத்து 47 ஆயிரம் வாக்காளர்களால் ஒப்படைக்கப்பட்டது. தலைவிதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தமிழரசுக் கட்சி இதுவரை காலமும் அதற்காகப் போராடிவந்திருக்கிறது. இனியும் போராடியே வரும். கடந்த 7 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் நலனுக்காகத் தொண்டாற்றி வந்திருக்கிறது. இதனை நினைவு படுத்திப்பார்ப்பது தமிழ் மக்களின் கடமையாகும்.

தமிழரசுக் கட்சியில் என்னைக் கருவியாக உபயோகப் படுத்திப் பிரிவினை ஏற்படுத்தச் சிலர் முனைகிறார்கள். தமிழரசு விதையைத் தேர்ந்தெடுத்து, அதன் வளர்ச்சிக்காக உழைத்துவருகின்ற என்னைக் கொண்டே தமிழரசுக் கட்சியைப் பிரித்துவிடப்பார்க்கிறார்கள். இது ஒருபோதும் நடக்கமுடியாது. எனது இறுதி மூச்சு உள்ளவரை தமிழரசை நான் மறக்கமாட்டேன். இந்த உறுதியைத் தமிழ் மக்களுக்கு தருகிறேன்.

மூதூர் முதல் எம். பி., ஜனுப் முகமது அலி, வவனியா எம். பி., தா. சிவசிதம்பரம் ஆகியோர் வாழ்த்துத் தந்திகள் அனுப்பியிருந்தனர்.

## கடன்தொல்லையால் மனைவியை பிரிந்துவாழ்ந்தவர் தற்கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி

கடன்தொல்லை காரணமாக மனைவியைப் பிரிந்து மூன்று மாதகாலமாக வேதனை அனுபவித்து வந்த சின்னையா சொக்கலிங்கம் (38 வயது) மனைவியுடன் மீண்டும் சேர முடியாத நிலையில் வெறுப்புற்று தமது உயிரையே மாய்த்துக்கொண்டார். இச் சம்பவம் சித்தங்கேணியில் நடைபெற்றுள்ளது.

இம் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர். காலஞ்சென்றவரின் மனைவி சிவபாக்கியம் (25 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இரு வருடங்களுக்கு முன்னர் காலஞ்சென்றவரைத் திருமணஞ் செய்தேன். எமக்கு 8 மாத வயதுடைய குழந்தை உண்டு. எனது கணவர் குடிப்பதும், சூதாடுவதும் வழக்கமாக உள்ளவர். இதனுல் கடன் தொல்லை அதிகரித்தது. அவர் வீட்டில் இல்லாத சமயங்களில் கடன்காரர் வீட்டிற்கு அடிக்கடி வரும் தொல்லை தாங்க முடியாமல் மூன்று மாதங்களுக்கு முன் அவருடைய இல்லத்திலிருந்து அவரைப் பிரிந்து எனது தாய் வீட்டுக்கு வந்தேன். சம்பவம் நடந்த தினத்தன்று காலை 11 மணிக்கு நான் இருக்கும் வீட்டிற்கு அவர் வந்தார். விருந்தையில் இருந்த பிள்ளையைத் தூக்கி முத்தம் கொடுத்தார். தன்னுடன் வந்திருக்கும்படி அவர் கேட்டார். அச்சமயத்திலும் அவர் மது அருந்திய நிலையியேலே காணப்பட்டார். ‘இன்னும் திருந்திய பாடாக இல்லை. ஆகையால் நான் வர மாட்டேன்’ என்று சொன்னேன். அத்துடன் அவர் திரும்பிவிட்டார். பின் மாலையில் அவர் இறந்ததாகக் கேள்விப் பட்டேன்.

சித்தங்கேணியைச் சேர்ந்த விஞசித்தம்பி தம்பிமுத்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ்சென்றவர் எனது மருமகளை விவாகஞ் செய்திருந்தார். மூன்றுமாத காலமாக அவர்கள பிரிந்திருந்தனர். வட்டுக்கோட்டையில் நடந்த ஒரு மரணவீட்டுக்கு இறந்தவர் போய்விட்டு வந்து என்னுடன் மூன்று நாட்கள் இருந்தார். சம்பவம் நடைபெற்ற தினம் காலையில் ஆட்டிறைச்சியும் - மரககறியும ஒரு போத்தல் சாராயமும் வாங்கி வரும்படி 30 ரூபா கொடுத்திருந்தேன். அன்று பிற்பகல் மூன்றரை மணிககு திரும்பி வந்தார். எனது காலைப் பிடித்து விம்மியழுதார். பின் அவர் குளித்துவிட்டு மதியபோசனமுண்டார். பின் படுத்துறங்குவதற்காக அறைக்குப்போனர். சில நிமிடங்களுக்குப் பின் வாந்தி எடுத்து தவிப்பதாக எனது மகன் வந்து சொன்னர். உடனே ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்றேன். அங்கு இறந்துவிட்டார். பொலிஸ் கான்ஸ்டபிள் குணதிலகா சாட்சியமளித்தார். டாக்டர் செல்வி வி: சிவக்கொழுந்து கிருமிநாசினி அருந்தியதால் ஏற்பட்ட மரணமெனத் தெரிவித்தார். மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

—

கொழும்பு, வியாழன்

இரத்தினபுரி, கொழும்பு வீதியில் கொங்கம என்ற இடத்தில் இரண்டு பஸ்கள் ஒன்றோடு ஒன்று மோதியதால் 4 பிரயாணிகள் காயமடைந்தனர் பஸ்களுக்கும் அதிக சேதமேற்பட்டுள்ளது.

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபா இசைவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் ஸ்ரீ வெங்கடேசவரதராஜப் பெருமாள் கோவில் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இன்றைய நிகழ்ச்சிகளுக்கு டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தலைமை வகிப்பார்.

மாலை 4-45 திரு. ஈ. அங்கப்பாக் கோஷ்டியார் — மேளம், 6-15 யாழ்ப்பாண ரசிக ரஞ்சனசபா சங்கீத கலாசாலை மாணவர் — பாட்டு, 6-30 திரு. சதாசிவம் — பாட்டு, திரு. கே. சித்திவிநாயகம் — வயலின், குஞ்சுக்குஞ்சுபாகவதர் — மிருதங்கம், 7-00 திரு. சி. செல்லத்துரை — பாட்டு, திரு. எஸ். சர்வேஸ்வரசர்மா — வயலின், திரு. ஐ. சிவபாதம் — மிருதங்கம், 8-15 திருமதி லலிதாம்பாள் இரத்தினசோதி — வீணை, திரு. வி. பத்மநாதன் — மிருதங்கம், 9-00 செல்வி நாகம்மா கதிர்காமர் — பாட்டு, திரு. வி. கே. குமாரசாமி — வயலின், திரு. டி. ஜயசுந்தரம் — மிருதங்கம், 10-15 திரு. வர்ணகுலசிங்கம் — பாட்டு, திரு. டி. வி, பிச்சையப்பா — வயலின், திரு. கே. பாக்கியநாதன் — மிருதங்கம்.

——

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதியும் அந்தமுமானுன்
கண்டாய்
பாலவிருத்தனுமானுன்
கண்டாய்
பவளத் தடவரையே போல்
வான் கண்டாய்
மாலை சேர்கொன்றை மலிந்
தான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணு
ளன்றானை.

— திருநாவுக்கரசர்

## திருமலைச் செய்திகள்

### கொலைவழக்கில் எதிரிகள் விடுதலை

கட்டைப் பறிச்சான் கொலை வழக்கு திருக்கோணமலை அஸைஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துத்துக்கொள்ளப்பட்டபொழுது சாட்சியங்கள் திருப்தியில்லாத காரணத்தினல் நீதியரசர் எச். டபிள்யு. தம்பையா 5 எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. சிட்டி ஆஜரானர்.

### விபத்து

திருக்கோணமலைநகருக்கருகிலுள்ள பஞ்சிமடம் ரயில்வே கடவையில் ரயில்-பஸ் விபத்து நடைபெற்றது. பஸ்ஸில் பிரயாணிகள் இருக்கவில்லை. பஸ் டிரைவரும் கண்டக்டரும் காயத்துக்குள்ளாகினர். இக் கடவையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவது சகஜம்.

### ராஜினமா

கட்டைப்பறிச்சான் முன்னை நாள் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். குணநாயகம் கிராம சேவையாளராகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

# "ஆசிரியர்களால்தான் அன்புநெறி பரவமுடியும்"

## உதவி வித்தியாதிபதி பேச்சு

மாவிட்டபுரம், வியாழன்

"அமைதியின்மையும் குழப்பமும் நிலவுகின்ற இன்றைய உலகிலே நல்லாசிரியர்கள் நற்பணி செய்யவேண்டியது அத்தியாவசியம். நல்லாசிரியர்களாற்றான் உலகில் அன்புநெறியைப் பரப்பலாம்" என்று வடபகுதி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் திரு. கே. கிருஷ்ணபிள்ளைக்கு பழைய மாணவர் சங்கம் அளித்த பாராட்டுவிழாவின்போது குறிப்பிட்டார். இக்கல்லூரி உப அதிபராகக் கடமையாற்றிய திரு. கிருஷ்ணபிள்ளை சென்ற ஆண்டில் பதவி உயர்வு பெற்று நடேஸ்வராக் கல்லூரி அதிபராக நியமனம் பெற்றதையொட்டி இவ்வைபவம் நடைபெற்றது.

திரு சோமசேகரம் தொடர்ந்து பேசுகையில் தன்னடக்கம், நற்பண்பு முதலிய நற்குணங்கள் ஒழுங்கே அமையப்பெற்ற ஆசிரியர்கள் ஒவ்வொரு சந்ததியிலும் தோன்றினால் அதுவே சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முககியமானதொன்ருகும் என்று கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. கெது. ஜெயரத்தினம் பேசும்போது 'திரு. கிருஷ்ணபிள்ளை கல்லூரி வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டைப் பாராட்டினர். பழைய மாணவர் சங்கச் சார்பில் பிரிவுபசார பாமலர் ஒனறைக் கவிஞர் செ. கதிரேசர் பிள்ளை வாசித்து வழங்கினர். பழைய மாணவர் சங்கச் சார்பில் பொறியியல் நிபுணர் திரு. அ. வேல்சாமியும் டாக்டர் சே. கதிர்காமசேகரமும் பேசினர்.

திரு. கிருஷ்ணபிள்ளை தமக்கு அளிககபபட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

---

## அனுமதியின்றி ஒலிபெருக்கி பாவிப்பு

### 50 ரூபா அபராதம்

மாவிட்டபுரம், வயாழன்

ஏழாலை மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை சிவபாதம் சென்ற மாதம் 17-ம் திகதி தனது ஒலி பெருக்கியை காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபரின் அனுமதியின்றி மல்லாகத்தில் உபயோகித்ததாக சுன்னகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்டிரேட் எதிரிக்கு 50 ரூபா அபராதம் விதித்தார்.

---

## உழவுக்கு சிறு யந்திரம்

கொழும்பு, வியாழன்

பாரமான டிராக்டர்கள் பாவிக்க முடியாத குளிர்ந்த பிரதேசத்தில் சிறுயந்திரத்தை எருமைக்கடாவின் உதவி மூலம் உழவுக்குப் பயன்படுத்த உணவு நீர்ப்பாசன அமைச்சு தீர்மானித்துள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், யந்திரங்கள் வாங்குவதற்கு கமத்தொழிலாளர்களுக்கு கடனுதவியளிப்பது சம்பந்தமான ஒரு திட்டத்தை கமிஷனர் திரு. ஜே. வி. பொன்சேக ஏற்படுத்தியுள்ளார்.

இந்த யந்திரம் ஒரு நாளில் ஒரு ஏக்கர் நிலத்தை உழுவதுடன் 200 புசல் நெல்லை எட்டு மணித்தியாலத்தில் விதைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

## கனடாவில சீனா கள்ளக் குடியேற்றம்

ஒட்டாவா, ஏப்ரல் 18

கம்யூனிஸ்ட் சீனவிலிருந்து வெளியேறிய சீனர்கள் பெருமளவில் கள்ளத்தனமாக கனடாவில் குடியேறியுள்ளனர். இவ்விதம் கள்ளத்தனமாகக் குடியேறியவர்களைக் கண்டுபிடித்து அவர்களை பிரஜைகளாக பதிவு செய்வதற்காக கனடா அரசாங்கம் அமுலாக்கிய திட்டம் நல்ல முறையில் செயல்படுவதாக கனடா அரசாங்க உயர்தர அதிகாரிகள் கூறினர்.

இந்தத் திட்டம் கடந்த நவம்பரில் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டப்படி 1960-ம் ஆண்டுக்கு முன்பாக சீனவிலிருந்து கள்ளத்தனமாக குடியேறியவர்கள் தாங்களாக முன்வந்து தங்களது கள்ளக் குடியேற்றம்பற்றி விபரம் தெரிவித்தால் அவர்களது பிரஜா உரிமைப் பிரச்னை அனுதாபத்துடன் பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. இத்திட்டத்தை அமுல் நடத்துவதில் கனடாவில் வாழும் சீனப் பிரமுகர்கள் நன்கு ஒத்துழைப்பதாக குடியேற்ற இலாகா மந்திரி ஆர். ஏ பெல், மற்றும் இதர அதிகாரிகள் கூறினர்.

இதுவரை அரசாங்கத்துக்கு தெரிந்து கனடாவில் 52 ஆயிரம் சீனர்கள் உள்ளனர். ஆயினும் உண்மையில் சீனர்களின் எண்ணிக்கை இதைவிட மிக அதிகமாக இருக்கும் என்று சந்தேகிககப்படுகிறது. ஏனெனில் கடந்த 10 வருடங்களில் சீனர்களின் கள்ளக் குடியேற்றம் பெருமளவில் அதிகரித்துவந்துள்ளது.

---

புதுடில்லி, ஏப். 18

இம் மாதம் 24-ம் திகதி 146 இந்தியக் கைதிகளை சீன விடுதலை செய்யுமென்று சீன செஞ்சிலுவைச் சங்கம் பாரத செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அறிவித்துள்ளது. சீன நேற்று 131 இந்தியக் கைதிகளை விடுதலை செய்தது.

---

# கொழும்பு நகரத்தில் குறைந்த பஸ் சேவை

கொழும்பு, வியாழன்

கொழும்பு நகரததில், இதுவரை தொடர்ந்து குறைவாக ஓடிவந்த பஸ்சேவை நேற்று மிகவும் குறைவாக காணப்பட்டதால், காலி வீதியில் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் தாங்கள் போகவேண்டிய இடத்திற்கு போவதறகு சுமார் ஒன்றரை மணித்தியாலம்வரை காத்துநிற்க வேண்டியேற்பட்டது.

தொழிலாளர்கள் லீவு எடுக்கும் காரணத்தால், அதிக பஸ்கள் சேவைக்கு விடமுடியாமல் இருப்பதாகவும், இந்த நிலைக்கு தொழிலாளர்கள்தான் காரணமென்றும், இ. போ. ச. வைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தார்கள்.

சிங்கள புதுவருட விடுதலைக்குப் பின், அதிகமானவர்கள வேலைக்குத் திரும்பாத காரணத்தால், மிகவும் அதிகம் வருமானமுள்ள இரத்மலானைடிப்போவைச் சேர்ந்த 30 பஸ்கள் சேவை செய்யவில்லை.

பொரளையில் 15 பஸ்களும் மீதோட்டமுல்லையில் 20 பஸ்களும், மஹரகமவில் 20 பஸ்களும், ஜாஎலவில் 11 பஸ்களும் சேவைக்கு விடப்படவில்லை.

சாரதிகள், கண்டக்டர் உட்பட வேலைக்குத் திரும்பாதவர்கள், அதிகமாக காணப்படுவது இ. போ. ச. சரித்திரத்தில் இதுவே முதல் தடவையாகும்.

சிங்கள புதுவருட விடுதலையை தொடர்ந்துமே, சம்பள நாட்களை தொடர்ந்தும் தொழிலாளர்கள் வேலைக்கு வராமலிருக்கிருர்களென்றும, ஆயுள்வேத வைத்தியர்களிடமிருந்து வெகு சுலபமாக வைத்திய சாட்சிப்பத்திரம் பெற்றுவிடுகிருர்களென்றும் இ. போ. ச.வைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தார்கள். பஸ் விபத்துக்கள் அதிகரித்து வருவதாகவும், இதனல் உயிர்களுக்கும் பிறருடைய சொத்துக்களுக்கும், சபைக்கும் அதிக நஷ்டமேற்படுவதோடு, இ. போ. ச. வைப்பற்றி தவருன அபிப்பிராயம்ஏற்பட்டுள்ளது.என்றும் இ. போ. ச. உதவி மனேஜர், பிரதேச மனேஜர்களுக்கு அறிவித்துள்ளார்.

---

# சிங்களத்தில்தேர்ச்சிபெருதவரை தண்டிக்க வேண்டாம்

## நீதி அமைச்சரிடம் எழுதுவினைஞர் இன்று கோருவர்

கொழும்பு, வியாழன்

உத்தியோக மொழியில் தேர்ச்சி பெருத உத்தியோகத்தர்களை தண்டிகக கூடாதென்றும், அவர்கள் அம்மொழியில் தேர்ச்சியடையும் பொருட்டு தூண்டவேண்டுமென்றும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நீதி அமைச்சர் திரு. சாம் பி. சி. பெர்ணண்டோவிடம் கேட்டுக்கொள்ளும். சங்கத்தைச் சேர்ந்த தூது கோஷடியொன்று இதுபற்றி மந்திரியை நாளை பேட்டி காணும்.

உத்தியோக மொழியில் தேர்ச்சி பெருத உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வை நிறுத்துவது பற்றி ஆராயும் பொருட்டுத் தன்னை சந்திக்கும் படி நீதி மந்திரி அழைத்திருக்கிருர்.

உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறுவதற்கு ஆறுவருடகால அவகாசம் அளிக்கப்படவேண்டுமென்றும், நஷ்டஈடுடன் ஓய்வு வழங்குவதற்கு இன்னும் சிறந்த வகையில் கிவரக்கூடிய முறை ஒன்றை வகுக்கவேண்டுமென்று தூதுக்குழு நீதி மந்திரியைக கேட்டுககொள்ளும்.

---

## புத்தளத்தில் 18 மைல் பாதை

கொழும்பு, வியாழன்

புத்தளம் கரையோரப்பகுதியில், சட்ட விரோத குடியேற்றக்காரர் அதிகரிக்கிருர்கள் என்பதைத் தொடர்ந்து, பாதுகாப்பு அமைச்சு, 18 மைல் நீளமுள்ள ஒரு பாதையை மறிச்சிக் கடைக்கும் முளககுடா வெளிக்குமிடையில் அமைக்க தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கை அண்மையில் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரி திரு. என். கியூ. டயஸ் தலைமையில் நடந்த மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இந்த மகாநாட்டிற்கு இராணுவ அதிகாரிகளும், உயர்தர இராணுவ உத்தியோகத்தர்களும், அரசாங்க காரியாலயங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், குடியேற்ற இலாகாவை சேர்ந்தவர்களும் பங்குபற்றினர்கள்.

இப் பாதை அமைக்கப்பட்டால் காடுகளிலிருந்து மரங்களைக் கொண்டு செல்வதற்கு உதவியாக இருக்குமென்ற வன இலாகாவினரின் அபிப்பிராயம் இம்மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

உத்தேச பாதை கடலுக்கு அருகாக அமைக்கப்பட வேண்டுமென இராணுவத்தினர் தெரிவித்தனர்.

---

## விதானைமாருக்கு பென்ஷன்

கொழும்பு, வியாழன்

கிராமத் தலைமைக்காரர் முறை இன்னும் சிலநாட்களில் ஒழிக்கப்படவிருக்கிறது. கிராமசேவைகள் நியமனம் பெற்றதும் கிராமத் தலைமைக்காரர் முறை ஒழிக்கப்படும். அப்பொழுது இதுரை கிராமத்தலைமைக்காரர்களாக பணிபுரிந்து வந்தவர்கள் தங்கள் பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்கள். இவ்விதம் 3,000-க்கு மேற்பட்டவர்கள் ஓய்வு பெறவிருக்கிருர்கள். ஓய்வு பெறும் இந்தக் கிராமத் தலைமைக்காரர்களில் அதிகமானேர்களுக்கு பென்ஷன் வழங்கப்படும். பத்து வருடசேவை செய்யாதவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையான பணம் வழங்கப்படும்.

கிராமத் தலைமைக்காரர்களாக இருந்தவர்களில் சிலர் கிராம சேவகர் பரீட்சையில் சித்தியெய்தி கிராம சேவகர்களாக பணியாற்றத் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## முதியவர் தற்கொலை

மீரிகம, வியாழன்

73 வயது முதியவர் ஒருவர் ஓடும் புகையிரதத்தின் முன்னல் குதித்து தற்கொலை செய்து கொண்டார். அட்டோபொது டேனியா என்ற இடத்தைச் சேர்ந்த ஜி. எச். அப்புகாமி என்ற இந்த முதியவர் நள்ளிரவு ஒருமணிக்கு வீட்டில் "பிரித்" ஓதிக்கொண்டிருக்கும் போது வீட்டைவிட்டு வெளியேறி புகையிரதத்தின் முன்னல் பாய்ந்து கொண்டார்.

---

# "குறுகிய கண்ணேட்ட கல்வித் திட்டம் நன்மை தராது"

## திரு. அருள்நந்தி விளக்கம்

உடுப்பிட்டி, வியாழன்

"அந்நிய ஆட்சியாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கல்வி முறையைக் கைநழுவி இன்று தேசியக் கல்வித்திட்டம் ஆரம்பமாகிஉள்ளது. ஆனல் குறுகிய கண்ணேட்டத்தில் தேசியக் கல்வித்திட்டம், பிரிவு மணப்பான்மை யடிப்படையில் உருவாகுமானல், அது தேசிய ஒருமைபபாடடுக்கு வழிவகுக்க முடியாது. தேசியக் கல்வி என்பது சூழலுக்கு ஏற்றவாறு தேசிய தேவைக்காகப் பூர்த்தி செய்யக்கூடியதாய் அமைதல் நல்லது".

இவ்வாறு உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னைநாள் உதவி வித்தியாதிபதி திரு. கே. எஸ். அருள்நந்தி கூறினர்.

"1930-ம் ஆண்டளவில் நான் ஜேர்மன் பிறின்ஸ்பிள்மாக் பாடசாலைக்குச் சென்றிருந்த சமயம் அங்கு இருந்த 20 ஆசிரியருள் 19 பேர் கல்வித்துறையில் கலாநிதிப்பட்டம் உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள் ஆனல் ஈழத்திலோ பெரும்பான்மையான ஆசிரியர் சிரேஷ்ட தராதரப் பத்திரமுடையோராய் மட்டுமே கடமையாற்றுகின்றனர். ஒரு தேசியக் கல்வித் திட்டத்தின் மூலைக்கல்லாக இருக்கவேண்டியவர்கள் பட்டம் பெறறுப் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருக்கவேண்டியது மிக மிக அவசியம்" என்று அவர் மேலும் கூறினர்.

விஞ்ஞான பாடங்களைச் சுயமொழிகளிற் போதிக்கலாமா என்பதுபற்றி நடக்கும் விவாதம் பற்றி திரு. அருள்நந்தி குறிப்பிடுகையில், சுயமொழிகள் இன்று விஞ்ஞானபாடங்களைப் போதிக்கத்தக்க முறையில் வளர்ச்சியடையவில்லையென்றும் இன்று விஞ்ஞானத்தில் அளவு கடந்த சொற்கள் உண்டென்றும் இச் சொற்களுக்கு இன்னும் கலைச் சொற்கள் தமிழில் வெளிவரவில்லையென்றும் தொடர்ந்து சில காலங்களுக்கு உலக மொழியாகிய ஆங்கிலம் விஞ்ஞான போதனமொழியாக இருக்கலாம் என்றும் கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. ஏ. வைத்திலிங்கம் தலைமை தாங்கினர். திரு. எஸ். தனேஸ்வரன் நன்றி கூறினர்.

---

## 2,000 பயிற்சிப் பாடசாலைகள்

கொழும்பு, வியாழன்

2,000 பாடசாலைகளை வர்த்தக கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளாக மாற்றுவதற்குக் கல்வி இலாகா நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

புத்தகக் கல்வி பயில முடியாத மாணவர்கள் இந்தத் துறைகளில் பயிற்சிபெற வசதி செய்யுமுகமாகவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

---

புளோரிடா, ஏப். 18

கியூபா பிரதமர் டாக்டர் பெடல் காஸ்ட்ரோ இவ்வருடத்தில் ரஷ்யாவுக்கு விஜயம் செய்வார் என்று ஹவாஞ வானெலி அறிவித்தது.

---

## ஈராக்கில் வெள்ளம்

பக்காத், ஏப். 18

வடக்கு ஈராக்கில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக இப்பகுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வடக்கு ஈராக்கில் சுமார் 23,000 மக்கள் வீடுகள் இழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ள நிலைமை குறித்து ஜெனரல் காரியதரிசி டாக்டர் சுய எல்வஹாப் தெரிவிக்கையில், வெள்ளம் குறைந்து வருகிறதென்றும் ஆனல் வெள்ள மேற்பட்டுள்ள பகுதி மக்களுக்கு உணவும் உடையும் அவசரமாகத் தேவைப்படுகிறதென்றும் கூறினர்.

---

## பஸ் சேவை

காத்தான்குடி, வியாழன்

கல்லாறு பிரயாணிகள் சங்கத்தின் வேண்டுகோளைத் தொடாந்து களுவாஞ்சிக் குடிக்குமிடையே பஸசேவையை நடாத்த மட்டக்களபபு இ. போ. ச. பஸ் டிப்போ திர்மானித்துள்ளது.

---

## கட்டுப்பாடு காரணம்

உடுநுவர, வியாழன்

டயர், டியூப் ஆகியவற்றுக்கு இறக்குமதிக கட்டுப்பாடு விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்க இலாகாக்களைச் சேர்ந்த வெளிவேலை உத்தியோகஸ்தர்கள் பலர் தங்களது மோட்டார் சைக்கிள்களையும் கார்களையும் வீட்டில் வைத்துவிட்டு பஸ்களில் பிரயாணம் செய்கின்றனர்.

# கயிறு இழுத்தல் போட்டியில் உத்தியோகத்தர் வெற்றி

## நெல்லியடி சனசமூகநிலைய விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடி சனசமூகநிலையத்தின் 25-வது ஆண்டு விழாவன்று நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்கள், வீரமணிகளின் விபரம் பின்வருமாறு:

100 யார் ஓட்டம், சிரேஷ்ட பிரிவு 'ஏ' ஆண்கள்: வி. சத்தியமூர்த்தி, எஸ். குனேந்திரன், எஸ். ஆறுமுகம்,

100 யார் ஓட்டம், சிரேஷ்ட பிரிவு 'பி' ஆண்கள்: கே. சிவராசா, தி. சோதிலிங், செ. சொர்ணராசா.

100 யார் ஓட்டம், மத்திய பிரிவு ஆண்கள்: கே. இராஜேந்திரன், சீ. இரத்தினசபாபதி, ரி. செல்வராசா.

100 யார் ஓட்டம், கனிஷ்ட பிரிவு ஆண்கள்: ரி. சுப்பிரமணியம், எம். தெய்வேந்திரம், க. சிறிமுருகன்.

100 யார் ஓட்டம், கனிஷ்ட பிரிவு ஏ பெண்கள்: எஸ்.ஜெயலக்ஷ்மி, க. பாக்கியராணி, ப. மலர்.

100 யார் ஓட்டம் கனிஷ்ட பிரிவு பி பெண்கள்: இ. நாகேஸ்வரி, எஸ். பத்மாசனி, எஸ். சந்திரவதனா.

75 யார் ஓட்டம், 10 வயதுக்குட்பட்டோர் ஆண்கள்: ரி. செல்வராசா, ஏ. சுப்பிரமணியம், எஸ். விஜயகுமார்.

75 யார் ஓட்டம், 7 வயதுக்குட்பட்டோர் பெண்கள்: எஸ். புவனேஸ்வரி, பி. சரோஜினி, ரி. விஜயலக்ஷ்மி.

50 யார் ஓட்டம், 7 வயதுக்குள் ஆண்கள்: எஸ். இரத்தினகுமார், எஸ். இராமச்சந்திரன், எஸ். இ. ராஜநாதன்.

30 யார் ஓட்டம், 5 வயதுக்குள் பெண்கள்: க. இராசலட்சுமி, பி. உமாதேவி, ரி. வசந்தகுமாரி.

தலையணைச்சண்டை(பொது): எஸ். சர்வானந்தன்.

தண்ணீரில் தோடம்பழம் எடுத்தல் (கனிஷ்டபிரிவு)ஆண்கள்: ஏ. தர்மராஜா.

சமநிறை ஓட்டம், கனிஷ்ட பிரிவு பி பெண்கள்: என் சந்திரவதனா, எஸ். இராசமலர், கே. மனோன்மணி.

ஊசிநூல் கோர்த்தல், கனிஷ்டபிரிவு ஏ பெண்கள்: எஸ். ஜெயலக்ஷ்மி, எஸ். சந்திரபிரபா, கே. மகேஸ்வரி.

குண்டெறிதல்: நா. நவரத்தினம், ஆர். ஆனந்தராசா, ஆர். ஈ. எம். ஜீ. பஸ்ரியன்.

முயற்பாய்ச்சல், 5 வயதுக்குள் ஆண்கள்: எம். பாலசுப்பிரமணியம், எஸ். தெய்வேந்திரன், ஏ. பாலகிருஷ்ணன்.

பின்பக்கமாகக் கார்ஓட்டல், 7 வயது ஆண்கள்: எஸ். இராமச்சந்திரன், ஆர். பாலச்சந்திரன், எஸ். இரத்தினகுமார்.

பலூன் ஊதி உடைத்தல் 10 வயதுக்குள் ஆண்கள்: கே. கிருஷ்ணகுமார், ஏ. சிறிராசா, எஸ். விஜயகுமார்.

பன்றிக்கு வால் வைத்தல், மத்தியபிரிவு ஆண்கள்: எஸ். சாந்தகுமார், க. இரங்கநாதன் ஏ. செல்வராசா.

வடைஉண்ணல் 5 வயது சிறுமிகள்: ரி. வசந்தகுமாரி, கே. இராசலக்ஷ்மி, என். சுபா.

வடை உண்ணல், 5 வயது பாலர்: கே. யோகேந்திரன், எம். பாலசுப்பிரமணியம், பி. செல்வராசா.

வடைஉண்ணல், 7 வயது பெண்கள்: மா. கண்ணம்பாள், ரி. விஜயலக்ஷ்மி, எஸ். கமலாதேவி.

கயிறு அடித்தல், கனிஷ்ட பிரிவு ஏ பெண்கள்: கே. பாக்கியராணி, ப. மலர், எஸ். ஜெயலக்ஷ்மி.

மூன்றுகால்ஓட்டம்,10 வயது பெண்கள்: கே. நிர்மலாதேவி, ஏ. இந்திராணி. தி. நாகேஸ்வரி, மா. இரத்தினேஸ்வரி. எஸ். சுசீலாதேவி, ரி. கனகாம்பிகை.

வில்பரோ ஓட்டம், 10வயது சிறுவர்: மா. பாலசுப்பிரமணியம, ஏ. சுப்பிரமணியம், கே. கிருஷ்ணமூர்த்தி, எம். கிருஷ்ணமூர்த்தி. கே. கலைச்செல்வன், கே கிருஷ்ணநாதன்.

ஊமல்காய் ஒன்று சேர்த்தல், 10 வயது சிறுமியர்: மா. இரத்தினேஸ்வரி, ரி. நாகேஸ்வரி, என். யோகேஸ்வரி.

7 வயதுக்குட்பட்ட பெண்களின் தடைஓட்டம்: மா. கண்ணம்மா, எஸ். கமலாதேவி, பி. சிறிவதி.

பின்பக்கம் கார்ஓட்டம், 5 வயது சிறுமிகள்: கே. சியாமளா, கே. இராஜலக்ஷ்மி, ரி. வசந்தகுமாரி.

440 யார் அஞ்சல்ஓட்டம்: (வெளியாட்களுக்கு): நெல்லியடி விளையாட்டுக் கழகம், வல்லை புளூ, வதிரி பொம்பஸ்கழகம்.

விநோதஉடைப்போட்டி: செ. சுவர்ணராசா, கே. செல்வராசா, க. பாக்கியராணி, ஏ. இந்திராணி.

தேங்காய் துருவல், கனிஷ்ட பிரிவு பி பெண்கள்: கே. மனோன்மணி, எஸ். பத்மாசனி, ரி. சூசைமலர்.

ஒருமைல் ஓட்டம் (வெளியாருக்காக): வி. கதிர்காமத்தம்பி, எம். அருமைத்துரை, எஸ். இராசநாயகம்.

உத்தியோகஸ்தரின் தடை ஓட்டம்: டாக்டர் பயஸ் பஸ்தியாம்பிள்ளை.

220 யார் தடைஓட்டம், சிரேஷ்டபிரிவு பி ஆண்கள்: ப. சத்தியமூர்த்தி, கே. குலசிங்கம், செ. ஆறுமுகவேல்.

பானை உடைத்தல் மத்திய பிரிவு ஆண்கள்: க. இரங்கநாதன்.

துவிச்சக்கரவண்டி மெதுவாகச் செலுத்துதல்: கிருஷ்ணசாமி, கதிர்காமத்தம்பி, அருமைராசா.

கெந்திக் கெந்திப்பாய்தல், சிரேஷ்டபிரிவு பி ஆண்கள்: செ. ஆறுமுகவேல், க. குலசிங்கம், ரி. சோதிசிங்,

நீளம்பாய்தல், சிரேஷ்ட பிரிவு ஏ: தி. பஞ்சராசா, சு. ஆறுமுகம், க. குமாரசாமி.

மத்தியபிரிவு நீளம்பாய்தல்: கே. இராஜேந்திரம், க. இரங்கநாதன், க. தெய்வேந்திரன்.

உத்தியோகத்தர்களுக்கும் மாணவர்களுக்குமிடையேநடைபெற்ற கரப்பந்தாட்டத்தில் மாணவர்கள் 2 ஆட்டங்களையும் பெற்றனர். உத்தியோகத்தர்களுக்கும் கமக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற கயிறு இழுவைப் போட்டியில் உத்தியோகத்தர்கள் வெற்றி பெற்றார்கள்.

# வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 19-4-63

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 கே. செல்வக் குமாரசாமி—பக்திப்பாடல்கள் 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள, 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை

இரவு 7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயா விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 ரி. பொன்னம்பலம்—கதாப்பிரசங்கம். 10-15 தேர்ந்த இசை

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 1-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள, 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-55 நாகஸ்வரம்.

பகல் 12-15 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 குரல் இசை. 1-50 வாத்திய இசை, 2-10 டி. பி. ராமகிருஸ்ணன்—பாட்டு

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி அஞ்சலி, 6-30 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பொங்கியெழும் பாரதம்—சித்திரம், 7-45 கே. வி. நாராயணசாமி—பாட்டு: 9-15 பலகணி, 9-30 மெல்லிசை, 9-45 இசைமாலை.

---

லியப்போல்டவில், ஏப. 18

காங்கோ பிரதமா திரு அடெளலா, தமது மந்திரி சபையை மாற்றியமைத் தார்.




## குடும்பத்தார் அனைவருக்கும் ஏற்றது

உங்கள் குடும்பத்தார் அனைவரும் ஸல்லை விரும்புவார்கள். குழந்தைகளுக்கு அதன் சுவை மிகவும் பிடிக்கும்—முக்கியமாக அவர்கள் அதை வெறும் பாலைப்போலக் குடிக்க விரும்புவார்கள். ஸல்லை வெறும் நீரில் கலந்தால் போதும், சிறந்த பால் பானமாகும். உங்கள் கணவர் அதைப் பெரிதும் விரும்புவார்—அது அவருடைய டீயையும் கோப்பியையும் அதிகரித்த சுவையுடையவையாக்குகிறது. குடும்பத்தை நடத்திச் செல்லும் நீங்கள் அதற்கு ஆசி கூறுவீர்கள்—ஏனென்றால் ஸல் உங்கள் வேலையை எளிதாக்கும்—அது தானாகவே கரைந்துவிடும். மேலும், அது மிகவும் சிக்கனமானது—பாலுக்கும் சீனிக்கும் செலவாகும் பணம் மிச்சமாகும். அதன் விலையும் சாதாரண மோல்டட பால்களின் விலையை விட அதிகமில்லை! ஆதலால், இன்றே, உங்கள் குடும்பத்தாருக்கு சுவை மிகுந்த சிக்கனமான ஸல்லை அளியுங்கள்!




—ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

## ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

## குடும்பத்தார் உடன் விரும்புவது

# டெலிபோன் கட்டண மோசடி வழக்கு

## மாவட்ட நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதியிலுள்ள 623 இலக்க டெலிபோனைக் கொண்டுள்ள கே. எஸ். நடராசா ஸ்தாபனத்தில் கடமைபுரியும் கே. நல்லையாவிடம் அந்த ஸ்தாபனத்தால் தபால் தந்திப் போக்குவரத்துப் பகுதிக்கு சென்ற நவம்பர் மாதக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டிய பண ரூபா 57-95 சதத்தை சட்டப்படி அறவிடுவதாகவும் தாம் தபால் ஊழியர் திரு. பி. சவரிமுத்து என்று யாழ்ப்பாணம் தந்திப் பகுதி ஊழியர் ஞசை சேவியர் என்று ஏமாற்றி மோசடிசெய்ய எத்தனித்ததாகவும் யாழ்ப்பாணம் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் டிஸ்டிரிக்கோர்ட்டில் விளங்குவதற்கு யாழ்ப்பாணம் கூட்டு மாஜிஸ்டிரேட் திரு. வி. எம். குமாரசாமி பாரப்படுத்தினர்.

யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. டி. எச். பி. ஜொகோரன் இவ்வழக்கைத் தாக்கல் செய்தார். எதிரிதரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர்.

வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் குறுக்குவிசாரணை செய்தபொழுது, யாழ்ப்பாணம் உதவி போஸ்ட் மாஸ்டர் திரு. பி. ஜே. எச். ஏ விக்னராசா கூறியதாவது:-

டிசம்பர் 29-ம் திகதி யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் சமயம் மாலை 5-20 மணியளவில் 623 இலக்கமுள்ள டெலிபோனிலிருந்து ஓர் செய்தி கிடைத்தது. நல்லையா என்பவர் என்னுடன் பேசும்பொழுது தபால் கந்தோரிலிருந்து பேசியதாகவும் நவம்பர் மாதம் தம்மிடமிருந்து செலுத்தியாகவேண்டிய பணத்தை உடனடியாகச் செலுத்தும்படியும் சவரிமுத்து என்பவரை அனுப்புவதாகவும் குறிப்பிடப்பட்டதாகவும் நம்பிப் பணம் கட்டலாமெனவும் பணம் கொடுபடாதுபோனால் டெலிபோன் வசதி துண்டிக்கப் டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சொன்னர். இதை உடனடியாக எமது மேற்பார்வையாளருள் ஒருவரான திரு. கே. பொன்னம்பலத்திடம் அறிவித்தேன். அவர் ஆக வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தார்.

மேலும் கேட்ட கேள்விகளுக்கு திரு. விக்னராசா சொன்னதாவது:-

தபாற்கந்தோர் மேற்பார்வையாளர்களே போஸ்ட்மாஸ்டருக்கு அடுத்தபடியாகவுள்ள எமது மேலதிகாரிகள். டெலிபோன் கட்டணங்கள் வழமையாக தபால் கந்தோரிலேயே செலுத்தப்பட்டுவருகின்றன. டெலிபோன் சொந்தக்காரரிடம் அவரவரிடத்தில் அறவிடுவது சட்டத்திற்கு மாறுனது. தபால் ஊழியர் சவரிமுத்து என்பவர் சட்டவிரோதமாகக் கட்டணங்கள் அறவிட்டு வந்ததுபற்றி எனக்குத் தெரியாது. நீண்டகாலமாக டெலிபோன் கட்டணங்கள் சட்டத்தை மீறிக களவாக அறவிடப்படுகிறதெனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதில் ஈடுபட்டவர்களைப்பற்றி எனக்குத் தெரியாது.

சப்இன்ஸ்பெக்டர் ஜொகோரன் சாட்சியமளிக்கையில் தபால் கந்தோரிலிருந்து கிடைத்த டெலிபோன் செய்தியின்படி தாம் குறிக்கப்பட்ட ஸ்தாபனத்திற்குச் சென்றபொழுது எதிரியையும் திரு. நல்லையாவையும் கண்டதாகவும் அப்பொழுது திரு. நல்லையா கொடுத்த முறைப்பாட்டின்பேரில் எதிரியைக் கைதுசெய்ததாகவும் சொன்னர்.

திருவாளர்கள் கே. நல்லையா, கே. மகாலிங்கம், பி. திருநாவுக்கரசு ஆகியோரும் வட்டவலை போஸ்ட்மாஸ்டர் திரு. வி. செல்வலிங்கமும் சாட்சியமளித்தனர்.

விசாரணை முடிவில் வழக்கு டிஸ்டிரிக் கோட்டிற்குப் பாரப்படுத்தப்பட்டது.

## இசைவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபாவின் 12வது ஆண்டு இசைவிழா நிகழ்ச்சிகள் இன்று மாலை வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள்கோவில் முன்றலில் அமைக்கப்பட்ட அலங்காரப்பந்தலில் நடைபெற்றது. நாதஸ்வர இசையுடன் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

## ஒத்துழைப்பு . : .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மேடையிலும் கூறுவேன். தமிழ்மொழிப் பிரச்னை ஓர்சிறுபான்மை மக்களின் பிரச்னை. இப்பிரச்னை அரசியலுக்கப்பால் வைத்து ஆராயப்பட வேண்டிய பிரச்னையாகு. இப்பிரச்னை தீர்க்கப்படாமல் இழுபடுவதற்குக் காரணம் 'குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை' போன்று அரசியல் வாதிகள் கையில் அகப்பட்டதே காரணம்.

சிங்களத் தோழர்களோடு உறவு கொண்டு ஐக்கிய இலங்கைக்காக சிறுபான்மை இனம் போராட வேண்டும். இல்லாவிடின் சிறுபான்மை மக்களின் எதிர்காலம் மிகவும் பயங்கரமானதாக அமையும். சிங்களமக்களோடு சினேகமனப்பான்மையுடன் பழகி அவர்களோடு ஒத்துழைத்திருந்தால் இன்றைய நிலை நமக்கு ஏற்பட்டிருக்காது. இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை தமிழரசுக்கட்சி ஏமாற்றி படுகுழியில் தள்ளுகின்றது. தமிழரசுக்கட்சியினர் தங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு பெறுவதற்காக நேரடிநடவடிக்கை, சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு போன்ற பாசாங்கு வார்த்தைகளால் தமிழ்பேசும் மக்களை ஏமாற்றுகிறது. தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்களமக்களுக்கும் இடையே உண்டான நீண்ட இடைவெளியை நிரப்ப எத்தனையோ தேசநலனில் அக்கறை கொண்ட பெரியார்கள் பாடுபடும் பொழுது தமிழரசுவாதிகள் கலோகங்களால் அம்முயற்சியை வீணாக்குகின்றனர்.

இந்நாட்டில் வாழும் சகல இனமக்களும் ஒற்றுமையுடனும் நல்லுறவுடனும் வாழாத பட்சத்தில நாட்டின் பொருளாதார நிலையில் சுபிட்சம் ஏற்படாது. மந்தநிலைதான் ஏற்படும். ஆகவே சந்துஷ்டியும் பொருளாதாரச் செழிப்பும் நிறைந்த, இரு இனமக்கள் ஒற்றுமையாக வாழுகின்ற ஐக்கிய இலங்கைக்காக தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையினரோடு ஒத்துழைக்க வேண்டியதவசியம்."

மூதூர் பிரிவுக் காரியாதிகாரி திரு. செல்வரத்தினம் மூதூர் வித்தியாதரிசி ஜனுப் எம். ஏ. மஜீத், உள்ளூராட்சி சேவைக்குழு உறுப்பினர் அல்ஹாஜ. எஸ். எம். ஏ. ஜமால்தீன் ஆகியோரும் பேசினர்.

# "சீன தாக்கலாம் தாக்காமலும் விடலாம்"

— நேரு

புதுடில்லி, ஏப்ரல் 18

சில அரசியல் காரணங்களால் சீன, இந்தியாமீது புதிய தாக்குதல் எதுவும் நடத்தாது எனத் தோன்றுவதாயும், ஆனல் வேறுசில காரணங்களால் சீனத் தாக்குதல் சாத்தியமென்பது உறுதிப்படுகிறது என்றும் பிரதமர் நேரு கூறினர்.

ஆந்திர பிரதேசக்கரைக்கப்பால் வங்காளக் குடாக்கடலில் அன்னியக் கப்பல் தென்பட்டதாகக் கேட்கப்பட்ட கேள்விக்கு, கடற்கரையில் சீனத் தாக்குதலை இந்தியா எதிர்பார்க்கவில்லை என பிரதமர் கூறினர்.

இதன்பின் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறியதாவது:

கடந்த 14-ம் திகதி இரவு ஜலாஷ்பா என்ற இந்திய வர்த்தகக் கப்பல் ஒன்று சென்றுகொண்டிருந்தபோது, மீன்பிடிக்கப்பல்போன்ற ஒரு கப்பல் தென்பட்டது.

சிக்னல் அடையாளம் காட்டியும் பதில் இல்லாததால் பாரத கப்பல் அதை நோக்கி நெருங்கிச் சென்றது. ஆனல் இந்த மர்மக் கப்பல் வேகமாகச் சென்று மறைந்துவிட்டது. அந்த இடத்திலிருந்து ஒரு மைலுக்கப்பால் வேறு மூன்று கப்பல்கள் காணப்பட்டன. அவையும் வேகமாக மறைந்துவிட்டன.

இதைத் தொடர்ந்து, மறுநாள் கடற்படை விமானங்களும், விமானப்படை விமானங்களும் இவற்றைத் தேடிச்சென்றன. ஆனல் ஜப்பானிய கப்பல் ஒன்றை மட்டுமே காண முடிந்தது.

## சிங்கள வாலிபர் திடீர் மரணம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் மீன்பிடித் தொழில் புரிந்த, களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த கட்டுக்குருந்த கிராமவாசியான டபிள்யு. ரி. லூகாஸ்தாசா (வயது 31) என்ற சிங்கள வாலிபர் நேற்று இரவு திடீர்எனக் காலமானர்.

பிழைப்புக்காகத் தனியாக இங்கு வசித்துவந்த இவரது மரணம் குறித்து இன்றுகாலை ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் விசாரணை நடைபெற்றது.

வேலணைக் கிராமப்பகுதிகளின் மரண விசாரணை அதிகாரி லீவில் சென்றமையால் தீவுப்பகுதி உடையார் திரு. மாணிக்கம் முருகேசு விசாரணை நடத்தினர்.

ஊர்காவற்றுறையில் வசிக்கும் சவிரிமுத்து ஆரோக்கியசாமி சாட்சியத்தில் கூறியதாவது -

நேற்று மாலை நான் எனது வீட்டில் இருந்தேன். பி. ப. 5 மணியளவில் இறந்தவர் எனது வீட்டுக்குவந்து தனக்கு நெஞ்சுக்குள் எரிவதாகவும், சவ்வரிசிக் கஞ்சி காய்ச்சித் தருமாறும் கேட்டார். சவ்வரிசி இல்லாமையால் சவ்வரிசிவேண்டக் கடைக்குப் போனேம். இறந்தவர் சவ்வரிசி வேண்டிக்கொண்டு எனது வீட்டுக்கு வந்துவிட்டார். நான்கடையில் நின்றுவிட்டேன். சிறிது நேரத்தின் பின் எனது மகன்வந்து அவருக்குச் சுகவீனம் கடுமையாக விருப்பதாகச் சொன்னர். உடனே நான் வீட்டுக்குச் சென்று லூக்காசை ஊர்காவற்றுறை அரசினர் வைத்திய சாலைக்குக் காரில் கொண்டு போனேன். ஆஸ்பத்திரி வாட்டில் விடுவதற்கு முன்பாகவே அங்கு அவர் இறந்துவிட்டார்.

ஆரோக்கியசாமியின் மனைவியான கருணவதி, டபிள்யு அன்ரனிடாஸ பொனிஸ் கான்ஸ்டபிள், சின்னையா நடராசா ஆகியோர்களும் சாட்சியமளித்தனர்.

நீண்டநேர விசாரணையின்பின் மாரடைப்பினல் ஏற்பட்ட திடீர் மரணம்என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்புக் கூறினர்.

## கல்லோயா அபிவிருத்தி சபைக்கு நிதி உதவி குறைக்கப்பட்டது

கல்லோயா, வியாழன்

வருடாவருடம் கல்லோயா அபிவிருத்திச் சபைக்கு அளிக்கப்படுவரும் நிதி உதவியை அடுத்த நிதிவருடத்திலிருந்து குறைப்பதற்கு காணிவிவசாய நீர்ப்பாசன அமைச்சு முடிவு செய்துள்ளது.

அடுத்தநிதிவருடத்தில் இந்த நிதிஉதவியை ஒருகோடியாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

முந்திய வருடங்களில் வருடமொன்றுக்கு குறைந்த அளவு நிதி உதவி ரூ 3 கோடியே 5 லட்சமாக இருந்தது.

## மாநகரசபை லிகிதர் திடீர் மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகரசபையில் லிகிதராகக் கடமையாற்றிய எஸ். வீரவாகு (27 வயது) இரத்த அமுக்கம் காரணமாக மரணமானர். திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர். காலஞ்சென்றவரின் தந்தை சின்னத்துரை சாட்சியமளித்தார். இயற்கைமரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## சீனித்தட்டுப்பாடு ஏற்படாது

கொழும்பு, வியாழன்

சீனித் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் சில வர்த்தகர்களால் இவ்விதமான நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதென்றும் அரசாங்க வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

சீனித்தட்டுப்பாடு ஏற்படும் என யாரும் அஞ்சத்தேவையில்லையென்றும் பல வழிகளில் சீனியைப்பெற்று பதுக்கிவைத்துப் பற்றுக்குறையை ஏற்படுத்த முயலும் வர்த்தகர்களின் முயற்சியைத் தோற்கடித்துவிடலாமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

நிலைமையை அவதானித்து இங்கு சீனி தேவைப்பட்டால் வெளிநாடுகளிடமிருந்து சீனியை இறக்குமதிசெய்யவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக நம்பப்படுகிறது.

## ராஜ்ய சபா அங்கத்தவர் மரணம்

திருச்சி, ஏப்ரல் 18

ராஜ்யசபா அங்கத்தினரான 59 வயதான திரு. ஸ்ரீனிவாசன் திருச்சியில் காலமானர்.

## கூ. மொ. வி. திருட்டு

### காவற்காரர்கள் விசாரணை

கொழும்பு, வியாழன்

கொழும்பு மக்கலம் வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் 25,000 ரூபாய் பெறுமதியுள்ள சேலைகள் களவாடப்பட்டது சம்பந்தமாக கூ. மொ. வி. ஸ்தாபனத்தைச்சேர்ந்த மூன்று காவற்காரர்கள் நேற்றுககாலை பொலிஸாரினல் விசாரணை செய்யப்பட்டனர்.


எதிர்பாருங்கள்

26-ந் திகதி வெள்ளிமுதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

அத்தனையும் புதிய படைப்பு!

சிவாஜி கணேசன் எஸ். எஸ். ராஜேந்திரன், பி. சரோஜா தேவி — ஆர். விஜயகுமாரி எம். ஆர். ராதா

— பி. எஸ். வி. பிக்சர்ஸ் —

ஆலய மணி

19.4.63

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

சந்திரபாபு, எம். என் ராஜம் டி. எஸ். பாலையா, கே. சூரியகலா, ரி எஸ். துரைராஜ் மற்றும் பலர் நடித்த

சிவகாமி பிக்சர்ஸ்

குமார ராஜா

திரைக்கதை—வசனம் முரசொலிமாறன் எம். ஏ

இசை டி ஆர் பாப்பா

டைரக்ஷன் ஜி. கே. ராமு

நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன்

பின்னணி வி என். சுந்தரம், பி. லீலா, ஜமுனராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

மனோகரா (யாழ்ப்பாணம்)

குருடட் — வஹிதா ரஹ்மான் நடித்த

டுவல் ஒ க்ளொக்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 83-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.